# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

ஏப்ரல் 2008 ஜீவியம் 13 மலர் 12

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்



| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் | 2 |
| இம்மாதச் செய்தி | 28 |
| நெஞ்சில் உறையும் தெய்வம் - ஆத்மா | 29 |
| அன்பர் கடிதம் | 32 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 33 |
| எந்தையும் தாயும் | 36 |
| முன்னேற்றம் தரக்கூடிய சாதனை | 59 |
| சாவித்ரி | 63 |



❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

**முடிவான பலனை முதலில் கொடுப்பது ஆத்ம சமர்ப்பணம்.**

**ஆண்டவனை ஆத்மா நாடிப் போவது பக்தி.**

**அடுத்த கட்டத்தில் ஆண்டவனே தன்னை நாடி வந்து ஆட்கொள்ள காத்திருப்பது நம்பிக்கை.**

**ஆட்கொண்டவனை அவனை நாடி அனுபவிப்பது யோகம் பூர்த்தியாவது.**

## லைப் டிவைன்

கர்மயோகி

## 16. சத்தியஜீவியத்தின் மூன்று நிலைகள்

உலகை சிருஷ்டித்தவர் பிரம்மா. பிரம்மா தெய்வீக மனம் (overmind) என்ற லோகத்திற்குரியவர். எனவே மனம் உலகை சிருஷ்டித்ததுஎன்பது மரபு. உலகைக் காலம் சிருஷ்டித்தது என்பாரும் உள£். **உலகை சிருஷ்டிக்கும் திறன் மனத்திற்கில்லைஎன விளக்கும் பகவான் உலகை சத்தியஜீவியம் சிருஷ்டித்தது என்கிறார்**. ‘‘கடவுளை நாம் அறிவோம்; உலகை அறிவோம். கடவுள் உலகைப் படைத்தார் எனவும் அறிவோம். ஆனால் எப்படிப் படைத்தார்என அறியோம். அதை அவரைக் கேட்கும் உரிமை நமக்கில்லை’’ என ரிஷிகள் கூறுவதை பகவான் முழுமையாக ஆமோதிக்கிறார். அதை உயர்ந்த விளக்கம்எனவும் கூறுகிறார். அவருடைய யோகம் மனத்தைக் கடந்து சத்தியஜீவியத்தை அடைந்தது. இதுவரை செய்த எல்லா யோகங்களும் அகந்தை பெற்ற சித்தி, மேல்மனத்தில் செயல்பட்டவை என்கிறார். பகவானுடைய யோகம் மேல்மனத்தைக் கடந்து அடிமனத்திற்குப் போய், சைத்திய ஜீவனையடைந்து, அது வளர்ந்து சத்தியஜீவனாவது. அதனால் ரிஷிகள் அறியாததை அவரால் அறிய முடியும். **இறைவன் எப்படி உலகை சிருஷ்டித்தார்என பகவான் அறிவார்**. மாயைஎன்ற 13ஆம் அத்தியாயத்திலாரம்பித்து தெய்வீக ஆன்மாஎன்ற 17ஆம் அத்தியாயம்வரை இறைவன் சிருஷ்டிக்கப் பயன்படுத்திய முறையை பலவாகப் பகுத்தும், தொகுத்தும் பகவான் கூறுகிறார்.



- ✡ முழுமையான பிரம்மம் தன் இச்சையால் அகம், புறம்எனப் பிரிய முடிவு செய்தது. இம்முடிவால் சிருஷ்டி ஏற்பட்டது என்கிறார். இதுவே சிருஷ்டிக்கு ஆதியான காரணம்; ஆரம்பம்.
- ✡ பிரம்மம் தன் இச்சையால் சத்என மாறியது. சத்என்பது உலகுக்கு ஆதி. அது ஒரு நிலை. அது ஜீவனாக மாறி சத் புருஷனாகவும் மாறுகிறது.
- ✡ **சத்தியஜீவியம் காலத்தைக் கடந்தது, காலத்திற்குட்பட்டதுஎன இரண்டாகப் பிரியும்பொழுது மனம் ஏற்பட்டது**. அதேபோல் பிரம்மம் சத்தாக மாறும் பொழுது சத்தியஜீவியம் உற்பத்தியாயிற்று.
- ✡ மனம் முழுமையைத் துண்டு செய்ய ஏற்பட்ட கருவி. சத்தியஜீவியமும் பிரிக்கும் கருவி. இரண்டிற்கும் ஒரு முக்கிய வித்தியாசம். ஒரு கட்டையைப் பல துண்டுகளாகப் பிரிப்பதுபோல் மனம் பொருள்களைப் பிரிக்கிறது. ஒரு மனிதனைத் தகப்பனார், முதலாளி, வாக்காளர்எனப் பிரிப்பதுபோல் சத்தியஜீவியம் பிரிக்கிறது. கட்டையின் துண்டுகள் தனியானவை. மனிதனின் அம்சங்கள் பிரியும்பொழுது மனிதன் பிரிவதில்லை. சத் என்பதை சத்தியஜீவியம் சத், சித், ஆனந்தம்எனப் பிரித்தது.
- ✡ சிருஷ்டி பயன்படுத்தும் உபாயங்கள்:
  - (1) அகம், புறம்எனப் பிரிவது.
  - (2) இச்சையால் செயல்படுவது, தானே தன்னை அளவுக்குட்படுத்திக் கொள்வது, தன்னுள் தான் மறைவது.
  - (3) ஒன்று பலவாகப் பிரிந்து, மீண்டும் ஒன்றாவது.
  - (4) அறிபவன், அறிவு, அறியப்படுவதுஎன ஜீவியம் மூன்றாகப் பிரிவது போல் பிரம்மம், அன்பு, ஆனந்தம் ஆகியவை பிரிவது.

அப்படி சிருஷ்டி கண்ட பல அனுபவங்கள்:

- ➔ பிரம்மம் சத்தானது.
- ➔ சத் - சத், சித், ஆனந்தமாகப் பிரிந்து சச்சிதானந்தமானது.
- ➔ சச்சிதானந்தம் புறமாகி சத்தியஜீவியமானது.
- ➔ சத் - அகம், புறமாகி காலம், இடமானது.

- ஒன்றான சத், பலவான ஜீவாத்மாக்களானது.
- பலவான ஜீவாத்மாக்கள் மீண்டும் சத்தில் ஒன்றாகக் கூடியது.
- மனம் ஜீவியத்தை ஞானம், உறுதியாகப் பிரித்தது.
- ஞானம் உறுதிமேல் செயல்பட்டு, வாழ்வுஎன்ற லோகம் உண்டானது.
- வாழ்வு சலனத்தையிழந்து ஜடமானது.

ஞானம் உறுதிமேல் செயல்படும்பொழுது தன்னை முழுவதும் இழந்து ஜடமாயிற்று. சலனமான வாழ்வு, சலனத்தை இழந்து ரூபம் பெற்று ஜடமாயிற்று.

**சுருக்கமாக இவற்றை பகவான் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:**

புருஷன் சலனத்தால் நகர்ந்து, சுயஞானம் பெற்று, அதைச் செயலாக்கும் திறன் பெற்று, தன்னுள் உள்ள சில சத்தியங்களைக் கண்டு, அவற்றைக் காலத்தைக் கடந்த வித்தாக மாற்றி, காலத்தில் சித்திப்பது சத்தியஜீவியம் என்கிறார்.

மேற்சொன்ன பல கட்டங்களில் இந்த அத்தியாயம் சத்திய ஜீவியம் இறைவன், ஜீவாத்மா, அகந்தைஎன்ற மூன்று நிலைகளை ஏற்ற வகையை மட்டும் விளக்குகிறது. இந்த அத்தியாயத்தின் முக்கியக் கருத்துகள்:

1) இதை ஆரம்பிக்கும் முன் ஈஸ்வரனைப் - காலத்தைக் கடந்த சத்தியஜீவியத்தைப் - பற்றி இதுவரை நாம் அறிந்ததை நினைவு கூறுவோம்.

2) **தன் செறிவான ஐக்கியத்தினின்று மாயை வழி ஈஸ்வரன் உலகை சிருஷ்டித்தான்**.

3) நாம் சர்வமும் பிரம்மம்என்ற அடிப்படையுடையவர்.
   - சத்தின் சுபாவம் ஜீவியம், ஆனந்தம்.
   - சலனமற்ற செறிவில் புருஷன் ஆனந்தத்தைத் தன்னுள் கொண்டு உள்ளது. புருஷன் செயல்படுவது லீலை. செயலில் புருஷன் லீலையை அனுபவிக்கிறான்.



   - அஞ்ஞானத்தால் நாம் மறந்த லீலையின் ஆனந்தத்தை பிரம்மம் நம்முள் ஆத்மாவாக அனுபவிக்கிறது.

4) ஐக்கியமான சச்சிதானந்தத்தை வலியுறுத்தினால், நமக்கு உலகம் வேண்டுமா, சொர்க்கம் வேண்டுமாஎன்று முடிவு செய்யும் கட்டாயம் உண்டு.

5) உலகை சொர்க்கத்திற்கும், சொர்க்கத்தை உலகுக்கும் எடுத்துரைப்பது இடைப்பட்ட சத்தியஜீவியம்.
   - காரண காரியமெனும் சட்டம் காலத்தை இடத்துடன் இணைக்கிறது.
   - காலத்தின் அசைவை இடத்தின் நிகழ்ச்சியாக்குவது சித்-சக்தி, ஞான-உறுதியெனப்படும். **இதை நடத்தும்பொழுது மனம் ஐக்கியத்தை இழப்பதுபோல், சத்தியஜீவியம் இழப்பதில்லை**.

6) சச்சிதானந்தம் தன் முதல் நிலையிலிருந்து அசைந்து வெளிப்படுவது பிரபஞ்ச சிருஷ்டிக்குக் கருவியாகும்.
   - சலனம் சக்தி; சக்தி ரூபம்; ரூபம் கருவி. அவை பிரபஞ்ச சிருஷ்டியின் கருவி.
   - சலனத்தை அடிப்படையாக்கி சச்சிதானந்தம் வெளிப்படுகிறது. அதனுள் அது பாத்திரமாகிறது. அது சக்தியின் ரூபம். அது சிருஷ்டியின் கருவி.
   - பிரபஞ்ச வாழ்வின் சக்தியின் அம்சங்களாக ஜீவியமும், சக்தியும் உள்ளன.
   - அந்த சக்தியின் ரூபங்கள் ஞானமும், உறுதியுமாகும்.
   - காலம், இடத்தில் அவை தொடர்புகளை ஏற்படுத்துகின்றன.
   - **புருஷன் சலனத்தால் நகர்ந்து சுயஞானம் பெற்று, அதைச் செயலாக்கும் திறன் பெற்று, தன்னுள் உள்ள சில சத்தியங்களைக் கண்டு, அவற்றைக் காலத்தைக் கடந்த வித்தாக மாற்றிச் சித்திப்பது சத்தியஜீவியம் என்கிறார்.**
   - அது சுய-ஞானம், சத்தியஜீவியம், முழு எண்ணம், சுய-சக்தி.

7) இறைவன் என்பது என்ன?

அனைத்தையும் தன் ஜீவனில் சிருஷ்டி செய்து, அவற்றின்

பரிணாமத்தைத் தன் சுய-ஞானத்தால் ஆட்சி செய்பவன் இறைவன். அவன் எங்கும் நிறைந்தவன், எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன். வாழ்வில் ஒருவர் செயல் அடுத்தவருடைய செயலுடன் மோதும். சத்தியஜீவியம் அவற்றைச் சுமுகமாகக் காணும்.

8) இறைவன், ஜீவாத்மா, அகந்தைஎன்ற மூன்று நிலைகளை சத்தியஜீவியம் ஏற்கிறது.

9) முதல் நிலை காலத்தைக் கடந்த சத்தியஜீவியம் (ஹிரண்யகர்ப்பம்*) (டாக்டர் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேர் தமிழ்ச்சொல் வைத்தியர் என்றாலும், ‘வைத்தியரை அழைத்து வா’ எனில் நாட்டுவைத்தியர் வந்து நிற்பார். அதுபோல் பிரக்ஞா, ஹிரண்யகர்ப்பா, ஜீவாத்மா என்ற சொற்கள் பரம்பரைப் பொருள் தரும் என்பதாலும், அவர் கொள்ளும் பொருள் அடிப்படையாக மாறும் என்பதாலும், அவர் சமஸ்கிருதச் சொற்களை முக்கியமான இடத்தில் தவிர்க்கிறார். ஜீவாத்மா அழியக்கூடியதுஎன்பது மரபு. அதுவே பரமாத்மாஎன்பது ஸ்ரீ அரவிந்தம். அதனால் பகவான் individual என்றே கூறுகிறார்). ஒன்றுள் பல, பலவும் ஒன்றுஎன்ற இறைவன் நிலை இது.

10) இரண்டாம் நிலை ஜீவாத்மா.

11) மூன்றாம் நிலை அகந்தை - அஞ்ஞானத்தில் உள்ள ஜீவனின் பல்வேறு நிலைகள்.

12) அடுத்த கட்டத்தில் அஞ்ஞானம் ஏற்படும். அது தவிர்க்க முடியாததில்லை. பிரிந்து நின்று பெறும்இன்பம் செறிவு பெற ஐக்கியத்தின் இன்பம் அவசியம்.

13) இம்மூன்றும் ஒரே சத்தியத்தை அனுபவிக்கும் மூன்று நிலைகள். இவை காலத்தால் முந்தையது, பிந்தையது என்பதில்லை; ஜீவியத்தால் உண்டு. **அநித்தியமான காலம் சுழன்று சுழன்று மீண்டும் வருவதால் நித்தியம் ஆகிறது**.

* பகவான் ஜீவாத்மாஎன்ற சொல்லைக் கூடியவரைத் தவிர்த்து individual என்று கூறுகிறார். இது ஹிரண்யகர்ப்பமானாலும் பொருள் சற்று மாறுபடும் என்பதால் அச்சொல்லை பகவான் பயன்படுத்துவதில்லை. The Life Divine Concordance என்ற நூலில் The Life Divineஇல் உள்ள ஒவ்வொரு சொல்லும் எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அது Jivatma என்ற சொல் 9 முறையும், Individual என்பது 801 முறையும் வருவதாகக் கூறுகிறது.



14) நாம் பிரம்மத்தை வலியுறுத்துவதால் பிணக்கும், வாதமும் நமக்குத் தேவையில்லை.

**PAGE 142 / PARA 1:**

பிரக்ஞா நாம் வாழும் உலகை விளக்கிக் கூறுகிறது. அதைப் புரிந்துகொள்வது எளிது. அது விடுதலையடைந்த மனிதனுடைய ஆத்மா. மனித மனப்போக்கிலிருந்தும், அதன் குறைகளினின்றும் அது சுதந்திரம் பெற்றது. தெய்வீக சத்தியஜீவியத்தின் செயலில் கலந்துகொள்ளும் உரிமையை அது பெறுகிறது. அதையறியுமுன் நாம் ஈஸ்வரனை அறிய வேண்டும். இறைவனின் ஜீவியம் ஈஸ்வரன். தன் மாயையால் ஈஸ்வரன் உலகை சிருஷ்டிக்கின்றான். தன் சிருஷ்டித் திறனால் அவன் அதை நிறைவேற்றுகிறான். அவனது செறிந்த ஐக்கியத்தால் அதைச் செய்கிறான். அதை நாம் அறிவது நல்லது.

**PAGE 142 / PARA 2:**

நமக்கு பிரபஞ்ச வாழ்வு முழுவதும் சத்புருஷனாகும். அதனுடைய முக்கிய சுபாவம் ஜீவியம். அதன் செயல்படும் சுபாவம் சக்தி அல்லது உறுதி. இப்புருஷன் ஆனந்தமயமானவன். இந்த ஜீவியம் ஆனந்தமயம் ஆனது. இந்த சக்தி அல்லது உறுதி ஆனந்தமயமானது. இது இறைவன். இதுவே நாம்; நம் அடிப்படையான ஜீவன். இதைத் தோற்றத்தைக் கடந்த ஜீவன் எனலாம். இது நித்தியம். இது பிரபஞ்ச வாழ்வின் அகலாத ஆனந்தம். இது ஜீவியத்தின் ஆனந்தம். இது சக்தி அல்லது உறுதியின் ஆனந்தம். இது தன்னில் செறிவு பெற்றுச் சலனமற்றுள்ளது. இது சிருஷ்டிக்கும் திறனுடையது; தீவிரமாகச் செயல்படக்கூடியது. செறிந்துள்ளபொழுது அகலாத ஆனந்தம் பெற்று உள்ளது. அடிப்படையான, நித்தியமான ஆனந்தம் இது. சிருஷ்டிக்கும் செயலில் அதற்கு லீலை கட்டுப்படும்; அல்லது அதுவே லீலையாகிறது. அது லீலையின் ஆனந்தமாகிறது. அது பிரபஞ்ச வாழ்வின் லீலை ஆகிறது. அது ஜீவியத்தின் லீலையாகிறது. அது சக்தி, உறுதியின் லீலையாகும். இந்த லீலை பிரபஞ்சத்திற்குரியது. இந்த லீலையின்

ஆனந்தமே பிரபஞ்ச வாழ்வின் ஒரே இலட்சியம். அதுவே நோக்கம்; அதுவே காரணம். தெய்வீக ஜீவியம் இந்த லீலையைப் பெற்றது. அதன் விலக்க முடியாத ஆனந்தத்தை நிலையாகப் பெற்றது. அதுவே நமது உண்மையான ஆத்மா. நமது பொய்யான ஆத்மாவான அகந்தையால் அது மறைக்கப்படுகிறது. அது மனத்தின் அகந்தை. அது தெய்வீக ஜீவியத்துடன் ஒன்றியிருப்பதால், அது வேறு வகையாக இருக்க முடியாது. நாம் தெய்வீக வாழ்வை நாடுகிறோம். நம் உண்மையான ஆத்மாவை திரை மறைவினின்று கொண்டு வாராமல் அதைச் செய்ய முடியாது. அதைச் சாதிக்க நம் போலி ஆத்மாவான அகந்தையினின்று உயர்ந்து, உண்மையான ஆத்மாவை அடைய வேண்டும். ஆத்மா நம் உண்மையான உயர்ந்த ஜீவன். தெய்வீக ஜீவியத்துடன் ஐக்கியப்படுத்துவதால் அதைச் சாதிக்கலாம். நமக்கு அது எட்டாத உயரத்திலுள்ளது. அப்படியில்லையெனில் நாம் உயிர் வாழ முடியாது. நாமறிந்த மனப்பான்மை தெய்வீக ஜீவியத்தை இழந்து விட்டது.

**PAGE 142 / PARA 2:**

Another Version of the same paragraph in my own words, not adhering to the text:

இந்திய மரபு உலகை இறைவன் படைத்தான்என்பது. பகவான் ஸ்ரீ அரவிந்தர் இறைவன் தானே உலகமாக மாறினான் என்கிறார். ‘‘ஏன் உலகை இறைவன் படைத்தான்?’’ என்ற கேள்வியை எழுப்பி, ‘‘இறைவன் ஆனந்தத்தை நாடி உலகை சிருஷ்டித்தான்’’ என்று அவரே பதிலளிக்கிறார். பிரம்மம் இறைவன். இறைவன் ஆனந்தமயம்என்பது மரபு. ஸ்ரீ அரவிந்தம் அதையே கூறுகிறது. இறைவன் ஆனந்தமயம் ஆனவன்எனில், அவன் ஏன் ஆனந்தத்தைத் தேட வேண்டும்என்பது கேள்வி. ரிஷிகள் கண்ட பிரம்மம் பகுதியானது; அசைவற்றது. அதன் ஆனந்தம் (Bliss) முதல்நிலை ஆனந்தம். பகவான் கண்ட பிரம்மம் முழுமையானது. அசைந்து உலகை சிருஷ்டிப்பது. அதன் ஆனந்தம் (Delight) இரண்டாம்நிலை ஆனந்தம். முதல்நிலை ஆனந்தத்தில் உள்ள பிரம்மம் இரண்டாம்நிலை ஆனந்தத்தைத் தேடி உலகை



சிருஷ்டித்தான்என்பது பகவான் ஸ்ரீ அரவிந்தர் விளக்கம்.

உலகம் அஞ்ஞானத்துள்ளிருப்பதால் உலகம் ஆனந்தத்தை வலியாக அறிகிறது. உலகம் காலத்தைச் சார்ந்தது. காலத்திற்கு ஆனந்தம் வலியாகத் தெரியும். காலத்தைக் கடந்த நிலையில் வலி ஆனந்தமாக (Bliss) மாறுகிறது. இது முதல்நிலை ஆனந்தம். இரண்டாம்நிலை ஆனந்தம் காலத்துள் காலத்தைக் கடந்த நிலைக்கு உரியது. அதை பகவான் Simultaneous integrality of Time eternity and Timeless eternity என்கிறார். நாம் சுருக்கமாக அதை இரு காலமும் இணைந்தநிலை எனலாம்.

- இதுவரை செய்த யோகம் மோட்சம் பெற. இது காலத்தினின்று காலத்தைக் கடந்த நிலையை அடைகிறது.
- பகவான் யோகம் திருவுருமாற.

  இது காலத்தினின்று இரு காலமும் இணைந்த நிலைக்குப் போகிறது.
- அசைவற்ற பிரம்மம் முதல்நிலை ஆனந்தம் பெறுகிறது. இது பகுதியான பிரம்மம்.
- முழுமையான பிரம்மம் லீலையுள் உள்ள பிரம்மம், அசைவில் லீலையாகி, இரண்டாம்நிலை ஆனந்தம் பெற காலத்தினின்று இருகாலமும் இணைந்த நிலைக்கு உயருகிறது.
- இரண்டாம்நிலை ஆனந்தத்தை ஆழத்தில் புதைந்துள்ள வளரும் ஆன்மா அனுபவிக்கிறது. அகந்தை அதை அறிவதில்லை.

செல்வம், செல்வாக்கு, பதவிஎன்பவை ஒன்றையடுத்து, அடுத்தது வரும். இவை மனித வாழ்வின் உச்சக்கட்டங்கள். உழைப்பால் செல்வமும், திறமையால் செல்வாக்கும், சூட்சுமத்தால் பதவியும் சேர்வது உலக அனுபவம்*. நடைமுறையில் இவை பலிக்க கடுமை, கொடுமை, வன்முறை, ஏமாற்றம் தேவை. நேர்மை, நாணயம், நியாயம், வாக்கைக் காப்பாற்றுவது, மானம், அன்பு, அழகு ஆகியவை

* இது முதல்நிலை வெற்றி என்பதுடன், பகுதியானது.

விலகினால்தான் மேற்சொன்னவை பலிக்கும். இது முதல்நிலை வெற்றி. உழைப்பின் கடுமையின்றி செல்வம் வாராது. திறமையின்றி செல்வாக்கு எழாது. சூட்சுமமின்றிப் பதவியைப்பெற முடியாது. உழைப்பு பொறுமையாகி, திறமை அறிவாகி, சூட்சுமம் நேர்மையாகி, நாணயம், நியாயம், மானம், அன்பு, அழகால் செல்வம், செல்வாக்கு, பதவி வருவது உலகில் இல்லை. **அது முழுமையானது. இரண்டாம் நிலை வெற்றி**. முடிவான, முழுமையான, பூரண பிரம்மத்தின் வெற்றி. இன்று உலகிலில்லாதது. என்றும் உலகம் அறியாதது. பகவான் தேடும் ஆனந்தம் இந்த இரண்டாம் நிலை வெற்றிக்கு ஒப்பாகும். ரிஷிகள் தேடிக் கண்டதை முதல் நிலை வெற்றிக்கு ஒப்பிடலாம்.

**PAGE 143 / PARA 3:**

அரசாட்சி மாறி மக்களாட்சி ஏற்பட்டது அரசியல் புரட்சி. அரசாட்சியில் அரசனுக்கு மக்கள் மனநிலையை அறிய முடியாது. மக்களாட்சியில் எலக்ஷன் வரும். அச்சமயம் மக்கள் மனநிலையை சர்க்கார் அறிய முடியும். சச்சிதானந்தம் ஐக்கியமானது. நம் மனம் துண்டுகளாலானது. இவற்றிடையே எந்த ஒற்றுமையுமில்லை. துறவி காட்டில் உள்ளார்; உயர்ந்தவர். அவருக்கு ஜபம், நிஷ்டை, சமாதி உண்டு. நமக்கு அவையெல்லாமில்லை. நமக்கு வீடு, கல்யாணம், திருவிழா உண்டு. துறவிக்கு அவையில்லை. துறவி வேறு; நாம் வேறு; தொடர்பில்லை. எலக்ஷன் மக்கள் மனநிலையை சர்க்காருக்கு எடுத்துச் சொல்வதுபோல் சத்தியஜீவியம் மனித மனத்திற்கும், சச்சிதானந்தத்திற்கும் இடையேயிருந்து, ஒன்றை அடுத்ததற்கு எடுத்து விளக்கி, ஒன்றை மற்றதுடன் சேர்க்கிறது. அது இல்லாவிட்டால் துறவறம், இல்லறம்போல் நாம் ஒன்றை ஏற்று, மற்றதை விலக்க வேண்டி வரும். **அதுவே ரிஷிகள் செய்தது. இல்லறத்தை விலக்கித் துறவறத்தை மேற்கொண்டனர். ஸ்ரீ அரவிந்தம் முழுமையானது**. எதை விலக்கினாலும் முழுமை குறையும். முழுமைக்குக் குந்தகம் வரும்படி நாம் எதையும் செய்ய முடியாது.

நாம் சச்சிதானந்தத்தை ஒரு புறமும், பகுதியான மனித



மனத்தை மறுபுறமும் வற்புறுத்தினால், இவை எதிரானவை. ஒன்று மெய், அடுத்தது பொய்யாக வேண்டும். எதிரான இரண்டும் மெய்யாக முடியாதல்லவா? ஒன்றை ஏற்க, ஏற்று அனுபவிக்க, அடுத்ததை மறுத்து விலக்க வேண்டும். ஆனால் நாம் மனத்தாலும், மனம் ஏற்படுத்திய ரூபங்களிலும் வாழ்கிறோம். சொர்க்கத்தை எட்ட மனத்தையும், வாழ்வையும் அழிக்க முயன்றால், உலகில் தெய்வீக வாழ்வில்லைஎன்ற முடிவுக்கு வருகிறோம். நாம் பரமாத்மாவிலிருந்து வந்தவர்கள். மீண்டும் பரமாத்மாவை அடையவேண்டும். அதைச் செய்ய உலக வாழ்வை உதறித் தள்ளவேண்டும் என்ற முடிவுக்கு வருகிறோம். இடைப்பட்ட நிலையொன்று இல்லைஎனில், இந்த முடிவு தவிர்க்க முடியாதது. சச்சிதானந்தத்திற்கும், நமக்கும் இடையே ஒன்று இருந்தால், அது நம்மை சச்சிதானந்தத்திற்கும், சச்சிதானந்தத்தை நமக்கும் எடுத்துரைக்குமானால், உலகை உதறித்தள்ள வேண்டாம். அது இருந்து, அப்படிச் செயல்பட்டால் சத், சித், ஆனந்தத்தை மனம், உயிர், உடலில் அனுபவிப்பது சாத்தியம். அது தெய்வீக வாழ்வாகும்.

**PAGE 143 / PARA 4:**

உலக வாழ்வை ஒரு கம்பனி வாழ்வுக்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம். பெரிய, பழைய கம்பனிகளில் முதலாளி வேறு, கம்பனி வேறு என்ற நிலை ஏற்பட்டுப் பிரிந்துவிடும். கம்பனிக்கு முதலாளி வந்து வருஷங்களாக இருக்கும். இருந்தாலும் கம்பனி ஓடும். இலாபத்திலும் ஓடும், நஷ்டத்திலும் ஓடும். எப்படி ஓடுகிறதுஎன எவருக்கும் தெரியாது. இதுவே இன்றைய மனித வாழ்வு. மனிதனுக்குச் சச்சிதானந்தம் நினைவில்லை. என்றாலும் சச்சிதானந்தம் மனிதனை மறக்கவில்லை. மனித வாழ்வு இயங்குகிறதுஎனில், அது சச்சிதானந்தத்தால்தான் - கடவுளால்தான் - நடக்கிறது. நஷ்டத்திலும் கம்பனி உயிரோடிருக்கிறதுஎனில், இந்த மாதம் கொடுத்த சம்பளம் முதலாளியின் பணம். அதனால்தான் கம்பனி நடக்கிறது. கம்பனியின் முடிவுகள் Board போர்டின் தீர்மானமாகின்றன. அத்தீர்மானங்கள் கீழே order, rule சட்டமாக ஆபீசர்மூலம் வருகின்றன. அவை

முதலாளியின் எண்ணத்தைப் பூர்த்தி செய்பவை. தொழிலாளி, அடுத்த டிபார்ட்மெண்ட்டுடன் போட்டியிடுவான். அது கம்பனியைப் பாதிக்கும். அதைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. மேலிருந்து வரும் தீர்மானமும், ஆர்டரும் முதலாளியின் எண்ணத்தைப் பாக்டரியில் பூர்த்தி செய்யும். தொழிலாளிக்கு அது தெரியாது. அவன் போட்டி போட்டு உற்பத்தியைத் தடைசெய்வான்.

உலகம்என்பது சச்சிதானந்தம் உற்பத்தி செய்தது. கடைசி கட்டத்தில் என்ன நடக்கவேண்டும் என்பதை சச்சிதானந்தம் ஏற்கனவே முடிவு செய்துவிட்டது. அதன் முடிவுகளை உலகில் காலத்தால் இடத்தில் பூர்த்திசெய்ய வேண்டும். ஒரு குழந்தை பிறக்க வேண்டுமானால், அது 10 மாதம் தாய் வயிற்றிலிருக்க வேண்டும்; அவன் தலைவனாக வேண்டுமானால் 50 ஆண்டு வாழவேண்டும்; இது காலம். அவன் சாதிக்க வேண்டுமானால் ஊரில் செயல்பட வேண்டும், தொழில் செய்யவேண்டும், நிலம் பயிரிடவேண்டும்; இது இடம். சச்சிதானந்தம் உலகில் ஓர் எண்ணத்தை ஒரு தலைவன் மூலம் நிறைவேற்ற காலமும், இடமும் தேவை. சச்சிதானந்தம் பெற்றுள்ளது சித்-சக்தி. சித்-சக்தி காலம், இடமாகி, அதன் எண்ணத்தைப் பூர்த்தி செய்யும் கருவி, அரங்கம், லோகம் சத்திய ஜீவியம். **எண்ணம் மனத்தில் உதயமாகி, உலகில் செயல்படுகிறது**. காலத்தில் ஏற்பட்டது இடத்தில் பூர்த்தியாகிறது. இதற்குரிய சட்டம் காரண-காரியம். சத்தியஜீவியம் காரண-காரியத்தால் காலத்தில் எண்ணத்தை உற்பத்தி செய்து, இடத்தில் பூர்த்தி செய்கிறது. மனம் இந்தச் சட்டத்தை அறியாது.

இடைப்பட்டநிலை இருக்கிறது. நாம் அதை சத்தியஜீவியம் என்கிறோம்; அல்லது சத்தியம்-ஜீவியம் என்கிறோம். இது மனத்தை விட உயர்ந்த சட்டம். அது அடிப்படையான ஐக்கியம்என்ற சத்தியத்தால் இருக்கிறது; செயல்படுகிறது; நடக்கிறது. மனம் தோற்றத்தை அறியும். அதன்படி நடக்கிறது. நாம் அனைத்தும் இறைவன்என ஆரம்பித்ததால், இறைவனுக்கும் உலகுக்கும் இடையே ஒருநிலை - சத்தியஜீவியநிலை - இருப்பது அவசியமாகிறது. சச்சிதானந்தம் காலத்தையும்,



இடத்தையும் கடந்த பிரம்மம். அது தன்னையறியும் ஆனந்தம். உலகம் எதிரானது. அது காலத்தால் இடத்தில் செயல்படுவது. அது காலத்திற்கும், இடத்திற்கும் உள்ள தொடர்பால் ஏற்படும் வாய்ப்புகளைக் காலத்தில், இடத்தில் சாதிக்கிறது. மனத்தில் ஏற்படும் எண்ணம் காலத்தில் ஏற்படும் வாய்ப்பு. அதை வாழ்வில் நிறைவேற்றுவது இடத்தில் பூர்த்தி செய்வது. இதைச் செய்வது காரண-காரியம். காரண-காரியத்தின் உண்மையான பெயர் தெய்வீகச் சட்டம். அதன் சாரம் எண்ணம். தன்னுள் உள்ள எண்ணத்தை வாய்ப்பாக வளர்த்து, சாதிப்பது அச்சட்டத்தின் நோக்கம். இவை முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டன. அம்முடிவுகள் முடிவில்லாதவை; கணக்கிலடங்கா; அனந்தம். அதைச் செய்வது ஞானம் - உறுதி அல்லது சித்-சக்தி. உலகம்என்பது பிரபஞ்சம். அது ஜீவியத்தின் லீலை. ஜீவியம் பிரபஞ்ச வாழ்வின் சுபாவம். ஞான-உறுதி இதைச் சாதிக்கிறதுஎனில், அது மனத்தின் ஞானம் இல்லை, மனத்தின் உறுதியில்லை. இந்தச் சட்டம் மனமறியாதது. இதை மனம் ஆளவில்லை; பெற்றிருக்கவில்லை. ஆனால் இச்சட்டம் மனத்தை ஆள்கிறது. மனம் தோற்றத்தில் உள்ளது. அதன் வேரைத் தொடவில்லை. உலகைத் தனித்தனிப் பொருள்களாக, நிகழ்ச்சிகளாக மனம் காண்கிறது. அவை வேரிலிருந்து உற்பத்தியானதை மனம் அறியாது. வேரைக் காண வீண்முயற்சி செய்கிறது. பெய்யும் மழையை மனம் 'மழை' எனக் காண்கிறது. வேலை நிறுத்தத்தை, 'வேலை நிறுத்தமாகக்' காண்கிறது. மனித மனம் வறண்டுபோனால் மழை பெய்யாதுஎன மனம் அறியாது. மக்கள் மனம் நெகிழ்ந்தால் மழை பெய்யும்என மனம் அறியாது. நிர்வாகம் சரியாக இல்லாவிட்டால், தொழிலாளிக்குத் திறமையில்லாவிட்டால் வேலை நிறுத்தம் வரும் என்பதை அறியாத மனம் மழையை 'மழை'யாகவும், வேலை நிறுத்தத்தை 'வேலை நிறுத்த'மாகவும் கண்டு, காரணம் புரியாமல் திகைக்கிறது. மேலும் அனைத்தையும் உற்பத்தி செய்யும் ஞான-உறுதி ஐக்கியத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும். அந்த ஐக்கியத்தில் இருந்து துண்டுகளை உற்பத்தி செய்ய வேண்டும். மனத்திற்கு இந்த ஐக்கியமில்லை. துண்டுகளை அரைகுறையாக மனம் சமாளிக்கிறது.

**PAGE 144 / PARA 5:**

சமூகம், சர்க்கார் ஆகியவை அதிகாரம் பெற்றவை. நாட்டில் அந்த அதிகாரம் அமுல் நடக்கின்றது. இது எப்படி நடக்கின்றது என்பது இறைவன் எப்படி உலகைப் படைத்தான் என்பதற்குச் சிறந்த உதாரணமாக அமையும். இறைவன் மனிதனை, மரத்தை, மற்ற பொருள்களை எப்படி சிருஷ்டித்தான்என்பது நம் கேள்வி. அதை சத்தியஜீவியம் செய்ததுஎன்பது பகவான் பதில். நாம் சமூகத்தைக் காண்பதில்லை. சர்க்கார்என்பது கண்ணுக்குத் தென்படாதது. சர்க்கார் அதிகாரிகளும், கட்டடங்களும் தெரிகின்றன. சர்க்கார் அதிகாரம் செயலில் தெரிகிறது; அதிகாரம் தெரியவில்லை. சமூகத்தை பிரம்மமாகவும், சர்க்காரை சச்சிதானந்தமாகவும் கொள்ளலாம். சத்தியஜீவியம் நிர்வாகம். **சர்க்கார் தன்னை நிர்வாகமாக மாற்றிக் கொண்டு செயல்படுகிறது**. ஒரு பாலம் கட்ட வேண்டுமானால் இன்ஜினீயர் கட்டுகிறார். இன்ஜினீயர் நமக்கு சர்க்கார். சர்க்கார் இங்கு இன்ஜினீயராகிப் பாலம் கட்டுகிறார். பாலம் கட்டுவதை அறிந்து, சர்க்கார் அதிகாரத்தைப் பெற்று, இன்ஜினீயர் பாலம் கட்டுகிறார். நமக்குப் பாலம் தெரிகிறது. இன்ஜினீயர் கண்ணுக்குத் தெரிவது இல்லை. மரம், மனிதன் தெரிகிறது; அதைப் படைத்த சத்தியஜீவியம் தெரிவதில்லை.

மனத்தைவிட உயர்ந்த சக்தி ஒன்றிருக்க வேண்டும். மனம் செய்ய முடியாததை அது செய்ய வேண்டும். பாலத்தை மக்கள் கட்ட முடியாது. இன்ஜினீயர் உத்தரவால் கட்ட முடியும். மனத்தைவிட உயர்ந்த சக்தி சச்சிதானந்தம். அது உண்டு. ஆனால் அது தூய்மை-யான, அனந்தமான, மாற முடியாத ஜீவியமான சச்சிதானந்தமில்லை. அதிலிருந்து புறப்பட்டு வந்த சக்தி. அந்த சக்தி ரூபம் பெற்று சிருஷ்டிக்குக் கருவியாகிறது. இது சத்தியஜீவியம். இன்ஜினீயர் சென்னையில் உள்ள சர்க்காரில்லை; டெல்லியில் உள்ள சர்க்கார் இல்லை; பாலம் கட்டும் அதிகாரத்தை மட்டும் பெற்று வந்த இன்ஜினீயர் சர்க்காராக வருகிறார். ஜீவியமும், சக்தியும் இரண்டு முக்கியமான சக்தியின் அம்சங்கள். அவை ஞானம், உறுதியாக



மாறுகின்றன. அவை காலத்துள் செயல்பட்டு, இடத்தில் வெளிப்படு-கின்றன. இந்த ஞானமும், உறுதியும் ஒன்றே. அது அனைத்தையும் தழுவும்; அனைத்தையும் உட்கொள்ளும்; அனைத்துக்கும் உருவம் தரும்; அனந்தமானது. இன்ஜினீயர் உதாரணத்தில் பாலம் கட்ட வேண்டிய படிப்பு, பயிற்சி, அனுபவம், பட்டம், பணம், காண்ட்ராக்டரை அதிகாரம் செய்யும் உத்தரவு, அனைத்தும் இன்ஜினீயருக்குண்டு. இன்ஜினீயர் செயல்பட்டால் பாலம் உருவாகிறது. சத்தியஜீவியம் செயல்பட்டால் உலகம் உருவாகிறது.

- இறைவன் செயல்திறன் பெற்று, சுயஞானம் பெற்று, தான் தன்னில் கண்ட உண்மைகளை காலத்தில் செயல்பட வைப்பது சத்தியஜீவியம்.
- சர்க்கார் பாலம் கட்டும் திறன் பெற்று, அதற்குரிய ஞானம் பெற்று, அதைக் கட்டும் உண்மையைத் தன்னில் கண்டு, ஆற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டும் அதிகாரி - இன்ஜினீயர் - யாக வருகிறது.

தன் ஜீவன் எதுவானாலும் அது சுய ஞானமாகிறது. அது சத்தியம்-ஜீவியம், முழு எண்ணம். சுய ஞானம் சுய சக்தி; அதனால் தன்னைக் காலத்தில் பூர்த்தி செய்துகொள்கிறது.

**PAGE 144 / PARA 6:**

இதுவே தெய்வீக ஜீவியத்தின் சுபாவம். அதுவே அனைத்தையும் தன்னுள் சிருஷ்டிக்கிறது. தன் சித்-சக்தியின் அசைவால் அதைச் சாதிக்கிறது. அவை வளர்வது சுய-வளர்ச்சி. அதையும் அதுவே நிர்வாகம் செய்கிறது. தன்னுடன் பிறந்த ஞான-உறுதியால் அதைச் செய்து முடிக்கிறது. அது அதன் சத்தியம். அதை முழு-எண்ணம் என்கிறோம். இம்முழு எண்ணம் அதற்கு உருவம் தந்தது. எந்த ஜீவன் இப்படித் தன்னையறியுமோ, அதை இறைவன் என்கிறோம். இறைவன் இக்காரணங்களால் எல்லாம் வல்லவன், எல்லாம் அறிந்தவன், எங்கும் நிறைந்தவன்.

- ஒரு குடும்பத்தில் நடப்பவை அனைத்தும் தலைவரால் செய்யப்பட்டவை.

அதனால் அவர், குடும்பத்தைப் பொருத்தவரை கடவுள், இறைவன் எனப்படும்.

- கடவுள்என்பது ஜீவியம், தெய்வீக ஜீவியம். அதன் சக்தி சித்-சக்தி. அதற்குச் சிருஷ்டித் திறனுண்டு. அது நகர்வது - சலனம் - சிருஷ்டி. அதன் அசைவு பரிணாமம்; சுயமான பரிணாமம். அதன் ஞானம் அதற்குப் பிறப்பில் ஏற்பட்டது. அதன் ஞானத்திற்கு உறுதியுண்டு. அதை முழுஎண்ணம் என்கிறோம். முழுஎண்ணம் அதன் சலனத்திற்கு ரூபம் தருகிறது.

  தெய்வீக ஜீவியம் அசைந்து தன்னுள் உலகை சிருஷ்டிக்கிறது. அதுவே கடவுள், இறைவன் எனப்படும்.

தெய்வீக ஜீவியம் - கடவுள், இறைவன் - தன் ஜீவனால், தன் சக்தியால் காலத்துள் அனைத்தையும் சிருஷ்டிப்பதால், அவன் எங்கும் நிறைந்தவன். அனைத்தும் அவன் வாழ்வில் வாழ்வதால், அவனால் ரூபம் பெற்று, அவனால் ஆளப்படுவதால், அவன் அனைத்தையும் அறிந்தவன். அனைத்தையும் பெற்ற ஜீவியம். அனைத்தையும் பெற்ற சக்திஎன்பதால், அது அனைத்தையும் கூறும் உறுதி. எனவே அவன் எல்லாம் வல்லவன். இந்த உறுதியும், ஞானமும் பிணக்கொழிந்தவை. நம் அறிவும், உறுதியும், மோதுவதுபோல் மோதுபவையல்ல. அவை ஒரே ஜீவனின் இரு அம்சங்கள்என்பதால் அங்கு பிணக்கில்லை. வெளியிலிருந்து வந்து அதை மறுக்கும் சக்தியோ, ஜீவியமோ, உறுதியோ இல்லை. இறைவனுக்குப் புறமாக எதுவும் இல்லைஎன்பதால் அது இல்லை. அதன் உள்ளேயுள்ள சக்தி, ரூபம், ஞானம் ஆகியவை அதற்குப் புறம்பானவையில்லை. அனைத்தையும் நிர்ணயிக்கும், அனைத்தையும் சுமுகமாக்கும் உறுதியின் லீலை அது. நம்மால் முழுமையைக் காணமுடியவில்லை என்பதால் பிணக்குத் தெரிகிறது. சத்தியஜீவியம் முழுமையானது. அதன் சுமுகம் முன்கூட்டி நிர்ணயிக்கப்பட்டது; அது என்றும் உள்ளது. அதன் பார்வையில் பிணக்கில்லை.

ஒரு திருமணத்தில் பெண் வீட்டார் மண்டபம் ஏற்பாடு செய்து, பிள்ளை வீட்டார் சமையல் ஏற்பாடு செய்து, பிள்ளை எவருக்கும்



அடங்காதவன், பெண் அமெரிக்காவில் படித்ததால் அவளிஷ்டப்படி தான் போக வேண்டும், பெரிய மனிதர்கள் வருவதால் அவர்கள் சௌகரியப்படி பல விஷயங்களை மாற்றி அமைக்க வேண்டும்எனில் ஒரே தகராறு, குழப்பமாக இருக்கும். பெண், தங்கை மகள்; பிள்ளையின் தகப்பனார் செலவு செய்கிறார்; மண்டபம் அவருக்குச் சொந்தம்; சமையல்காரன் இவர்கட்குப் பல தலைமுறைகளாக வேலை செய்பவன்; வரும் பெரிய மனிதர்கள் எல்லோரும்வர பெருமைப்படு-கிறார்கள்என்றால் பிணக்கு, தகராறு, குழப்பத்திற்கு வழியில்லை.

**PAGE 145 / PARA 7:**

ஓர் இலாக்காவில் வேலை செய்பவர், அந்த இலக்காவை விட்டு அடுத்த டிபார்ட்மெண்ட்டிற்குப் போகமுடியாது. அவர் செய்யும் வேலையை மாற்றும் அதிகாரமும் அவருக்கில்லை. IAS ஆபீசர் எந்த டிபார்ட்மெண்ட்டிற்கும் போகலாம். மனிதன் குறிப்பிட்டதுபோல் செயல்பட வேண்டும். ஏனெனில் அவனது ஜீவியம் சிறியது, குறிப்பிட்டது. சத்தியஜீவியம் அளவற்றது, பெரியது. அது எப்படியும் செயல்படும். சிருஷ்டியில் சத்தியஜீவியம் மூன்று நிலைகளில் - இறைவன், ஜீவாத்மா, அகந்தை - செயல்படுகிறது. மகன் தகப்பனார் கம்பனியில் அவருக்குக் கீழே வேலை செய்கிறான், கிளப்பில் அவருடன் செஸ் விளையாடுகிறான் எனில், அவர் வீட்டில் தகப்பனார், கம்பனியில் அதிகாரி, கிளப்பில் சக விளையாட்டு ஊழியன் என்று மூன்று உறவுகளில் தகப்பனாரைச் சந்திக்கிறான். அதுபோல் சத்தியஜீவியம் மூன்று நிலைகளில் செயல்படுகிறது.

**PAGE 146 / PARA 8:**

சத்தியஜீவியம் எந்த ரூபத்தை ஏற்றாலும், எந்த நிலையில் இருந்தாலும், சத்தியஜீவியம் தெய்வீக ஜீவியத்தின் - சச்சிதானந்தத்தின் - சுபாவமாகவேயிருக்கும். சத்தியஜீவிய வாழ்வு பிரம்ம சிறப்புள்ளது (absolute). அதன் நீட்சியில் அதன் சக்தியும் அதே பிரம்ம சிறப்புள்ளதாக இருக்கும்.

(Perfect, absolute என்ற சொற்களைத் தமிழில் எழுதுவது கடினம். சிறப்புஎன எழுதலாம். சிறப்புஎனில் best எனக் கொள்வார். Perfect எனில் குறையற்றதுஎன்று பொருள். ஒரு மாணவன், சிறப்பான மாணவன்எனில் அவன் கெட்டிக்காரன், புத்திசாலி, தவறாமல் வகுப்புக்கு வருபவன், முதலாக வருவான், எவரும் அவன் மீது குறைகூற முடியாதுஎன அறிகிறோம். He is a perfect student. அது எப்படி வருகிறது? தன் நேரமெல்லாம், கவனமெல்லாம், ஆர்வமெல்லாம், நோக்கமெல்லாம் படிப்பிற்கும், நல்ல பெயர் எடுப்பதற்கும் செலவு செய்தால், அவன் perfect student ஆகிறான். He devotes himself absolutely to his studies எனலாம். Absoluteஆக இருந்தால் perfection வரும். பிரம்மம் என்பதை ஆங்கிலத்தில் Absolute என்பர். He is absolutely good; absolute goodness எனில் அவன் பேசினாலும், உதவினாலும், விளையாடினாலும், எந்தக் காரியம் செய்தாலும், அங்கு அவன் நல்ல குணம் நிறைந்திருக்கும். Absolute fool, absolute beauty, absolute resourcefulness என நாம் கூறுகிறோம். Absolute என்பது பிரம்மம். எல்லா அம்சங்களிலும் absoluteஆக இருப்பது Absolute. அதிலிருந்து வரும் சக்தியும் absolute என்கிறார். அதை இங்கு பூரணச் சிறப்புஎன்று குறிப்பிட்டேன்).

சத்தியஜீவியம் ஒருநிலையில் செயல்பட வேண்டும்என்ற அவசியமில்லை. எத்தனை நிலைகளிலும் செயல்படும். நாம் மனிதர்கள். தோற்றத்தில் உருவானவர்கள். நமக்குக் குறிப்பிட்டநிலை (poise) உண்டு. அது காலம், இடத்திற்குக் கட்டுப்பட்டது. அது மேல்மனத்திற்கு உரியது. அதுவே நாம். ஒரு சமயத்தில் ஒன்றையே செய்ய முடியும். ஓர் உருவம்மட்டுமே நமக்குரியது. ஒருநிலை நம்நிலை. நம் அனுபவக் கோவைகளில் ஒன்றே நம்முடையது. அது மட்டுமே நம் வாழ்வுக்குரியது சத்தியம். மற்றவை உண்மையில்லை. அவை கடந்ததில் மறைந்தவை. எதிர்காலம் இன்னும் வரவில்லை. தெய்வீக சத்தியமான சத்தியஜீவியம் அப்படி அளவுக்குட்பட்டதன்று. ஒரே சமயத்தில் அது பலவாக இருக்கும். என்றும் நிலைக்கும் ஒருநிலையையும் அது ஏற்க வல்லது. உலகிற்கு அடிப்படையான ஜீவியமாக அதுபோன்ற மூன்று



நிலைகளை நாம் சத்தியஜீவியத்தில் காண்கிறோம். முதல் நிலை விலக்க முடியாத ஐக்கியம்; அது இறைவன். அடுத்தது, அந்த ஐக்கியத்தை ஒன்றிலிருந்து பலவற்றை ஏற்படுத்தவும், பல ஒன்றில் உறையும்படியும் மாற்றியமைக்கிறது; அது ஜீவாத்மா. மனிதன் பல நிலைகளில் உலகில் அஞ்ஞானத்தில் செயல்படுவதை ஆதரிப்பது அடுத்தது; அது அகந்தை.

முதல் நிலை சத்தியஜீவியம், இறைவன். நாம் படிக்க பள்ளியில், கல்லூரியில் சேர்கிறோம். பரீட்சை எழுதுகிறோம். பட்டம் பெறுகிறோம். இது மனித வாழ்வுபோல் குறிப்பிட்ட சாதனை; அளவுக்குட்பட்டது. கல்லூரி மாணவன் 'கல்வி பரந்தது' என அறிந்து, கல்லூரியை விட்டு வெளியேறினால், வகுப்பில்லை, பரீட்சையில்லை, பட்டமில்லை. அத்தனையும் கரைந்து, மறைந்துவிடும். அதுபோல் முதல் நிலை சத்தியஜீவியத்தின் பார்வை மனிதன் மேல் பட்டால், அவன் மனித நிலை கரைந்து பிரம்மநிலையை அடைவான். நியாயம் தேடி கோர்ட்டுக்குப் போனால், பிராது கொடுத்து, வக்காலத்து வைத்து, வக்கீல் மூலம் கேஸை எடுத்துச் சொல்லி, தீர்ப்பைப் பெற்று, டிக்ரி செய்து, நிறைவேற்ற வேண்டும். நான் கோர்ட்டுக்குப் போகமாட்டேன் என ஒருவன் சொன்னால், அல்லது கோர்ட்டில் உள்ள கேஸை வாபஸ் செய்தால், அங்கு கோர்ட், வாதம், தீர்ப்பில்லை; வாழ்க்கை கொடுப்பதை ஏற்கவேண்டும். அது தர்ம, நியாயப்படி நடக்கும். நம் கர்மம் பலிக்கும். நாம் - மனிதன் - என்பது அங்கிருக்காது.

முதல்நிலை சத்தியஜீவியம் ஐக்கியமுடையது. அந்த ஐக்கியம் அதைவிட்டு விலக முடியாதது. அது சச்சிதானந்தமன்று. சச்சிதானந்தம் தூய்மையான, ஐக்கியமான ஜீவியம். எனினும் இந்நிலை சத்தியஜீவியம் காலத்தையும், இடத்தையும் கடந்த செறிவு உடையது. இதுவும் சச்சிதானந்தத்தைச் சார்ந்தது. இங்கு சித்-சக்தி தன்னை சிருஷ்டியாக மாற்றுவதில்லை. அதனுள் பிரபஞ்சம் உண்டு. உண்டு எனில் காலத்துள், இடத்துள் நமக்கு விளங்கும் முறையில் பொருள்களாகவோ, ஜீவன்களாகவோ இல்லை; வித்தாக இருக்-கின்றது.

சீனுவாச இராமானுஜம் மேதை. அவருடைய கணித மேதைமை அவர் பரீட்சை எழுதிப் பாஸ் செய்யப் பயன்படவில்லை. பரீட்சையில் கேள்விக்குப் பதில் எழுதி மார்க் வாங்கும் அளவுக்கு அது விவரமாக இல்லை. அது மேதைமை genius என்ற அளவில் உள்ளது. அது போல் இம்முதல் நிலை சத்தியஜீவியத்தில் - இறைவனில் - உலகம் நமக்குப் புரிவது போலில்லை. ஆனால், நாளை உலகில் வெளிப்படும் வித்தாக உள்ளது. சச்சிதானந்தம் அனைத்தையும் அறிவது, அனைத்தையும் பெற்றது, அனைத்து அமைப்பும் அதனுடையது. அப்படி சச்சிதானந்தம் மாறும்பொழுது இறைவனாகிறது. இத்தனையும் ஒன்றே; பலவல்ல. தனிமனித ஜீவியத்திற்குரியது எதுவும் இங்கில்லை. இதன் சாயல் மனிதன்மீது பட்டால், அவன் உருவம், ஆத்ம ரூபம் கரைந்துவிடும். அனைத்தும் ஐக்கியத்தில் ஒன்றாக உருவாக்கப் பட்டது. அனைத்தும் இந்த தெய்வீக ஜீவியத்தின் வாழ்வு ரூபமாக எழுந்தவை. தனிப்பட்ட உருவமோ, உருவகமோ இல்லை. நம் மனத்தில் எண்ணங்களும், ரூபங்களும் எழுபவை நாம் அல்லவா? அவை நம்மிலிருந்து பிரிந்து வேறானவையில்லை என்பதுபோல் இறைவனில் - இம்முதல் நிலை சத்தியஜீவியத்தில் - உலகத்தின் பொருள்களும், ஜீவன்களும் உள்ளன. இது தூய்மையான தெய்வீக எண்ணம். இது அனந்தனின் ரூபம். மனம் இல்லாததை உருவகப்படுத்துகிறது. சத்தியஜீவியம் இருப்பதை உருவகப்படுத்துகிறது. தெய்வீக ஆத்மா இந்நிலைக்கு உரியது. அதற்கு புருஷனுடைய ஆத்மாவுக்கும், பிரகிருதியுடைய ஆத்மாவுக்கும் வித்தியாசமில்லை. ஏனெனில் சக்தி என்பது ஜீவியத்தின் செயல். அதற்கு ஜடத்திற்கும், ஆன்மாவுக்கும் வித்தியாசமில்லை. உலகில் அனைத்தும் ஆன்ம ரூபமன்றோ!

**PAGE 146 / PARA 9:**

உலகில் ஒன்றான பரமாத்மா பலவான ஜீவாத்மாக்களாகி, மீண்டும் பரமாத்மாவை அடைவது சிருஷ்டி, பரிணாமம். அதை ஆதரிப்பது இரண்டாம்நிலை சத்தியஜீவியம்.

இரண்டாம்நிலை சத்தியஜீவியம் சலனத்துடன் செல்லாது



பின்தங்கி நிற்கிறது. அச்சலனமும் அதனுள் உள்ளது. அதை பிரக்ஞாவால் சித்திக்கிறது. அதைப் பின்தொடர்ந்து, உள்ளுறைந்து, நிரப்புவது சத்தியஜீவியம். பார்வைக்கு அது தன்னைப் பல ரூபங்களில் விநியோகம் செய்வதாகக் காணப்படும். அப்படி எழும் ஒவ்வொரு பெயரிலும், ரூபத்திலும் அது - சத் புருஷன் - தன்னை சித்திக்கிறது. எல்லாவற்றிலும் அதுவேயுள்ளது. ஜீவாத்மா பரமாத்மாவாக எழுந்து செய்யும் லீலையை அது அங்ஙனம் ஆதரிக்கிறது. எங்கும் ஆத்மாவில் ஒன்றான அந்த ரூபங்கள் மாறி மாறி வரும் ஆத்ம ரூபங்களாகும். இதை இறைவனின் தனி ரூபம் என்கிறோம். அதுவே ஜீவாத்மா. இது பிரபஞ்ச ஆத்மா இல்லை. அதனுள் உலகில்உள்ள அத்தனை ஜீவாத்மாக்களும் உள. அதுவன்று நாம் கூறுவது. பிரபஞ்ச ஆத்மாவுக்கும், ஜீவாத்மாவுக்கும் முக்கிய வேறுபாடில்லை. நடைமுறையில் மாற்றமுண்டு. மகனுக்கு வீட்டை வாடகைக்குக் கொடுத்தால் அவன் குடியிருப்பவனாகிறான். அதனால் மகனில்லை என ஆகாது. நடைமுறையில் மகன் வேறு, குடியிருப்பவன் வேறு. பிரபஞ்ச ஆத்மா எல்லா ஜீவாத்மாக்களையும் தான்என அறியும். இருந்தாலும் ஒவ்வொரு ஜீவாத்மாவுடன் தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக்கொள்ளும். ஒவ்வொரு ஜீவாத்மாவும் பிற ஜீவாத்மாக்களுடன் தனித்த உறவை ஏற்படுத்த பிரபஞ்ச ஆத்மா உதவும். ஜீவாத்மா தன்னை ஒரு தனித்த ஆத்ம ரூபமாக அறியும். அது பரமாத்மாவின் ஆத்ம சலனமாகும். முதல்நிலைச் செயலால் ஜீவாத்மாக்களுடன் ஒருமையை அறியும். இரண்டாம்நிலையில் ஜீவாத்மாவின் ஒருமையையும், வேற்றுமையையும் அறியவல்லது. நம் தூய்மையான மனம் இந்த இரண்டாம்நிலையைப் பிரதிபலிக்கும். அத்துடன் நமது ஆத்மா பரமாத்மாவுடன் ஒருமையை அதன் மூலம் அறியும். இது தவிர வேறு எந்தச் சந்தர்ப்பங்களாலும் சத்தியஜீவிய வாழ்வு மாற்றத்தைக் காட்டாது. ஒரு மாற்றம் உண்டு; ஒன்று பலவாகி, பல ஒன்றாவது லீலை.

நாட்டில் பார்லிமெண்ட் ஏற்பட்டு, மந்திரி சபை அமைத்து, நிர்வாகம் நடக்கிறது. பார்லிமெண்ட் ஏற்படுவது முதல்நிலை; மந்திரி

சபை அமைப்பது இரண்டாம்நிலை; நிர்வாகம் மூன்றாம்நிலை. முதல் நிலைக்குரிய அதிகாரம் எலக்ஷன் கமிஷனிடம் உள்ளது. இரண்டாம் நிலைக்குரிய அதிகாரம் ஜனாதிபதிக்குத் தரப்பட்டுள்ளது. பிரதமருக்கு மூன்றாம்நிலை அதிகாரம் உண்டு. சத்தியஜீவியத்தின் மூன்று நிலைகளுக்கும் இவற்றை உதாரணமாகக் கூறலாம்.

**PAGE 147 / PARA 10:**

பையனைக் கல்லூரிக்கு அனுப்பினால், அவன் படிக்க வேண்டும். தினமும் அவனுடன் உட்கார்ந்து படிக்கும் தகப்பனாரும் உண்டு. பெண்ணைத் திருமணம் செய்துகொடுத்தால் அவள் குடும்பம் நடத்துவாள். அவள் வீட்டில் போய், பெண் நடத்தும் குடும்பத்தைத் தானே எடுத்து நடத்தும் தாயாரும் உண்டு. **விலகி நின்று செயல்பட வேண்டியவர் வேலையில் கலந்துகொள்வது உண்டு**. அதுபோல் பின்னாலிருக்க வேண்டிய ஆத்மா வேலையுள் நுழைந்து ஈடுபடுவதும் உண்டு.

மூன்றாம்நிலை சத்தியஜீவியத்தில் ஆதரவு தரும் ஜீவியம் பின்னாலிருப்பதில்லை. அது செயலுள் நுழைந்து, அங்கு உறைந்து, ஓர் அதிகாரத்துடன் செயலுள் கலந்துகொள்கிறது. இங்கு செயலின் தரம் மாறும். ஜீவாத்மா பிரபஞ்ச ஆத்மாவுடன் கொள்ளும் தொடர்பும், மற்ற ஜீவாத்மாக்களுடன் கொள்ளும் தொடர்பும் அடிப்படையான ஐக்கியத்தை இரண்டாம்பட்சமாக அனுபவிக்கும். உயர்ந்த நிலையில் ஐக்கியஉணர்வு அடிப்படையாக அமையும். இம்மூன்றாம்நிலை ஆனந்தமயமான இரட்டை வாழ்வாகும். இங்கு ஐக்கியம் இரண்டாம் பட்சமாக இருக்காது. வக்கீல் கட்சிக்காரன் வழக்கை நடத்துவதற்கும், தானே வாதியாகித் தன் வீட்டு வழக்கில் வக்கீல் பேசுவதற்கும் உள்ள வித்தியாசம். தன் வழக்கில் வக்கீல் முழுவேகத்துடன் பேசுவார். பிரபஞ்ச ஆத்மாவுக்கும், ஜீவாத்மாவுக்கும் உள்ள மாறுபாட்டை நிலைநிறுத்துவதே இவ்விரட்டை வாழ்வாகும்.



**PAGE 148 / PARA 11:**

கம்பனி முதலாளியுடையது. தொழிலாளிக்கு சம்பளம் உண்டு எனில், தொழிலாளி மனத்தளவில் கம்பனியைவிட்டுப் பிரிந்து விடுகிறான். அகந்தை பிரபஞ்சத்தைவிட்டு இதுபோல் விலகி தனித்திருக்கிறது. மாறாக தொழிலாளி கம்பனியைத் தன் கம்பனியாகக் கருதி வேலை செய்வது அதிகப் பலனையும், அதிக சந்தோஷத்தையும் தரும். **பிரிந்து நின்று, கூடி வாழ்வது பெரிய இன்பம் தரும். அதையே இந்நிலை காண்கிறது**. பிரிவது, கூடி வர வழி. பிரிந்து, கூடுவது அதிக சந்தோஷம் தரும். மகனிடம் பெட்டிச் சாவியைக் கொடுத்தால் மரியாதை போகும், சண்டை வரும்என்பது பலருடைய அனுபவம். அது தவிர்க்க முடியாதது இல்லை. மகன் நிர்வாகத்தை எடுத்து நடத்துவது கம்பனிக்கு அதிக இலாபம் வரும். மனம் வளர்ந்தபின் மகன் உறவு ஆழ்ந்து இனிக்கும்.

> இதன் முதல் விளைவு அறியாமைஎனக் கூறத் தோன்றும். ஜீவாத்மாக்களை உண்மைஎனவும், பரமாத்மா ஜீவாத்மாக்களின் தொகுப்புஎனவும் அவர்கள் கருதுவார்கள். தொகுப்புக்கு எண்ணிக்கையுண்டு; அதிகாரமிருக்காது. உண்மையில் அத்தவறு நடக்காது; நடக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ஜீவாத்மா தான் பரமாத்மாவின் சிருஷ்டிக்கும் சக்தியிலிருந்து எழுந்ததை அறியும். பரமாத்மா காலத்தைக் கடந்தது. ஜீவாத்மா காலத்தில் ஏற்பட்டது. காலத்துள் பரமாத்மா காலத்தைக் கடந்துறையும் வகையில் ஏற்பட்டதுஎன்பதை ஜீவாத்மா அறியும். ஒரு கம்பனியில் வேலை செய்யும் தொழிலாளிகள் ஓட்டுப் போடும் உரிமையை கம்பனிக்குத் தருவதில்லை. அவ்விஷயத்தில் அவர்கட்குச் சுதந்திரம் இருப்பதுபோல் - நாட்டுக் குடிமகனாக இருப்பது - ஜீவாத்மா தனி மனிதனில் உறைந்தாலும், பரமாத்மாவுடன் தனக்குரிய தொடர்பை அறுத்துக்கொள்வதில்லை. மேலெழுந்தவாரியான பிரிவையும், அடிப்படை ஐக்கியமும் இணைந்த அமைப்பு பரமாத்மா-ஜீவாத்மா. இவை மேலும், கீழும் உள்ள இருதுருவங்கள். **எந்த அளவுக்கு மேலே பிரிந்துள்ளதோ, அந்த அளவுக்கு அஸ்திவாரம் அதிக சந்தோஷத்தை அனுபவிக்கும்**.

**PAGE 148 / PARA 12:**

ஒரே சந்தோஷத்தை மூன்று வகைகளாக அனுபவிப்பதே இம்மூன்று நிலைகள். சந்தோஷம் ஒன்று; அனுபவிப்பவரும் ஒருவர்; அனுபவிக்கும்வகை மூன்று. ஜீவாத்மா பரமாத்மாவிலிருந்து வெளி வந்து, மீண்டும் பரமாத்மாவை அடைவதை ரிஷிகள் கண்டு, 'ஜீவாத்மா அழியக்கூடியது' என முடிவு செய்துவிட்டனர். பகவான் ஸ்ரீ அரவிந்தர் ரிஷிகள் கூறியதற்கு மாறாகக் கூறுகிறார்:

➜ பரமாத்மா நித்தியம், ஜீவாத்மா அநித்தியம். - ரிஷிகள்
பரமாத்மா ஒன்று, ஜீவாத்மாக்கள் ஆயிரமாயிரம்.

➜ பரமாத்மாவே ஜீவாத்மா. - பகவான்
பரமாத்மா ஒன்று, ஜீவாத்மாவும் ஒன்று. ஸ்ரீ அரவிந்தர்
பரமாத்மாவும் நித்தியம், ஜீவாத்மாவும் நித்தியம்.

ரிஷிகள் ஏற்கும் வகையில் தம் கொள்கையை பகவான் எடுத்துக் கூறுகிறார். மீண்டும் மீண்டும் ஜீவாத்மா எழுவதால் காலத்தைக் கடந்த நித்தியம் காலத்தில் நித்தியமாகிறது. எனவே ஜீவாத்மாவும் அழிவற்றதுஎனக் கூறுகிறார். ஜீவாத்மா அழியக் கூடியதானால், அது மீண்டும் ஜனிக்க முடியாது. அழிவது ஜீவாத்மா இல்லை; ஜீவாத்மாவின் ரூபம்.

இந்த மூன்று நிலைகளும் ஒரே சத்தியத்தை அனுபவிக்கும் மூன்று வழிகளாகும். அனுபவிக்கப்படும் சத்தியம் ஒன்றே. அனுபவிக்கும் முறைகள் வேறு. வாலிபால், டென்னீஸ், புட்பால் விளையாடினால் மூன்றும் விளையாட்டே. வெவ்வேறு வகைகளான விளையாட்டுகள். அனுபவிக்கும் ஆத்மாவின்நிலை வேறு. TV பார்ப்பது, விருந்து சாப்பிடுவது, டூர் போவது, மூவகைகளான அனுபவங்கள். TVயை அனுபவிப்பது கண்; விருந்தை அனுபவிப்பது நாக்கு; டூர் போவதை அனுபவிப்பது உடல். அனுபவம் ஒருவருடையதே. அனுபவிக்கும் நிலைகள் வேறு. ஆனந்த ரூபங்கள் மாறுகின்றன. அனைத்தும் சத்தியஜீவியத்தின் மாறுபட்ட நிலைகளே. எங்கும்



அஞ்ஞானமோ, பொய்யோ எழவில்லை. இவற்றின் அடிப்படையில் ஏற்பட்ட மதங்கள் பிற மதங்களைப் பொய் என்கின்றன. அது உண்மை இல்லை. இரண்டாம்நிலை, மூன்றாம்நிலைகள் முதல்நிலையில் உள்ளதையே தங்கள் நிலைக்கேற்ப மாற்றி அனுபவிக்கிறார்கள். M.A., B.E., M.B.B.S. ஆகியவை கல்வி. கல்விஎன்ற முதல் நிலையை பட்டம்என்ற அடுத்தநிலைக்கு மாற்றும்பொழுது கணிதம், இன்ஜினீயரிங், மருத்துவம்என மாறுகிறது. ஒன்று மெய், மற்றவை பொய்எனக் கூற முடியாது. மாயைஎனவும் கூற முடியாது. உபநிஷதங்கள் உயர்ந்த பண்டைய ஆன்மீக இலக்கியம். அவை தெய்வ வாழ்வைப் பற்றிப் பேசும்பொழுது, அது மனித வாழ்வில் வெளிப்படு-வதைப் பற்றிப் பேசும்பொழுது, இம்மூன்றுநிலைகளும் உண்மை எனக் கூறுகின்றனர். எது முந்தையதுஎனக் காலத்தால் நிர்ணயிக்க முடியாது; ஜீவியத்தால் கூறலாம். ஜீவாத்மா, பரமாத்மாவை நம்பியது என்பதை வேதாந்தம் எப்பொழுதும் மறுக்கவில்லை. காலத்துள் ஜீவாத்மா நித்தியமாகத் தோன்றவில்லை. பரமாத்மாவிலிருந்து எழுந்து வந்து, மீண்டும் பரமாத்மாவை அடைவதாகத் தோன்றுவதை ரிஷிகள் ஜீவாத்மா அழிவதாகக் கொண்டனர். இன்று தமிழ்நாடுஎனப்படுவது அன்று சென்னைமாகாணமாக இருந்தது. இன்று சென்னை மாகாணமில்லை. அதனால் தமிழ் மக்கள் அழிந்துவிட்டனர்எனப் பொருளில்லை; பெயர் மாறிவிட்டது. ரயில் ஓடும்பொழுது தந்திக் கம்பம் ஓடுவதாகத் தெரிகிறது; ஓடவில்லை; ஓடுவது ரயில்.

**PAGE 149 / PARA 13:**

மனம் ஒரு பக்கத்தை வலியுறுத்தி, அடுத்தது பொய் என்பதால், மதங்கள் வேறுபட்டுப் பூசல் எழுகின்றது. சச்சிதானந்தத்தை மட்டும் ஏற்பவர் ஐக்கியத்தை வலியுறுத்துகின்றனர். அது ஐக்கியத்தின் லீலை. நம் மனம் அதை வேறுபாடாகக் காண்கிறது. அதனால் சச்சிதானந்தம் மெய், வாழ்வு பொய்என நினைக்கிறோம். உயர்ந்த கொள்கை இரண்டையும் ஏற்றுக்கொள்ளும். நாம் அதை மறுத்து லீலையை மாயை என்கிறோம். மீண்டும் பரமாத்மா ஜீவாத்மாவில் வெளிப்படு-வதை ஏற்கிறோம். இதை இரண்டாம்பட்சம் ஐக்கியமாக ஏற்கிறோம்.

அதனால் ஜீவாத்மாவை ஆத்மரூபமாக ஏற்கிறோம். ஆனால் சச்சிதானந்தத்தின் உண்மையை மறுக்கிறோம். மீண்டும் லீலையை ஏற்று, லீலையைவிட உயர்ந்த ஆத்மீக அனுபவத்தை மறுக்கிறோம். நமக்கு இவையெல்லாம் வீண்வாதங்கள்; தேவையற்றவை. இவை மிகைப்படுத்தப்பட்ட வாதங்கள், மறுப்புகள்; நமக்குத் தேவையில்லை. நாம் பிரம்மத்தை ஏற்கிறோம். பிரம்மத்தின் பூரணச் சிறப்பை நாம் அறிவோம். நம் கொள்கைக்கு ஐக்கியமும் புறம்பன்று; லீலையும் புறம்பானதன்று; இரண்டையும் உட்கொண்ட உயர்நிலையும் புறம்பானதன்று. சச்சிதானந்தம், பரமாத்மா, ஜீவாத்மா, அனைத்தும் நமக்கு ஏற்புடையதாகும். நாம் இவ்வாதங்களை ஏற்பது அவசியமில்லை.

***

## பாராவின் கருத்துகள்:

**143/1:** **மனம், உயிர், உடலைப் பற்றியறியுமுன் ஈஸ்வரனை அறிய வேண்டும்.**

**143/2:** **உலகம் பிரம்ம மயமானது. பிரம்மத்தின் லீலை உலகம். நம் ஆத்மா லீலையை அனுபவிக்கிறது. அகந்தை அதை அறியவில்லை.**

**143/3:** **நாம் சொர்க்கம், உலகம்என்பதில் ஒன்றை ஏற்று, அடுத்ததை மறுக்க வேண்டும்.**

**144/4:** **சத்தியஜீவியம் இடைப்பட்டது. சித்-சக்தி, ஞான உறுதி காலத்தில் உலகை வெளிப்படுத்துகிறது.**

**144/5:** **சத்புருஷன் சுயஞானம் பெற்று, தன்னுள் உள்ள சத்தியத்தை காலத்தில் சிருஷ்டிப்பது சத்தியஜீவியம்.**

**144/6:** **இதைக் கடவுள் என்கிறோம். கடவுள் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிந்தவர், எல்லாம் வல்லவர்.**

**145/7:** **சத்தியஜீவியத்தில் பரமாத்மா, ஜீவாத்மா, அகந்தை என்ற 3 நிலைகள் உள.**

**146/8:** **முதல்நிலை சத்தியஜீவியம் கடவுள்.**

**146/9:** **இரண்டாம்நிலை சத்தியஜீவியம் ஜீவாத்மா.**



**147/10:** **மூன்றாம்நிலை சத்தியஜீவியம் அகந்தை.**

**148/11:** **அகந்தைக்கு அறியாமை இன்றியமையாததில்லை. பிரிந்தநிலை ஆனந்தம் பிரிய முடியாத ஆனந்தம்.**

**148/12:** **இவை மூன்றும் ஒரே சத்தியத்தை மூன்று வகைகளில் அனுபவிப்பது ஆகும். ஜீவாத்மா அழியக்கூடியதன்று; நித்தியமானது.**

**149/13:** **நாம் பிரம்மத்தையும், அதன் முழுமையான லீலையையும் ஏற்பதால் மதப் போராட்டங்கள் நமக்கு உதவா.**

❀❀❀


**MALARNDHA JIVIYAM**

Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No.IV, Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Puducherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mrs. Anuradha Sriram,** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Integra, 51, II cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry 605 005. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Balakrishnan,** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 12, I Cross, Venkata Nagar, Puducherry 605 011. |
| 5. | Editor's Name | : | **N. Asokan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 5, Puduvai Sivam St., Venkata Nagar Extn., Puducherry 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital. | : | **The Mother's Service Society,** 5, Puduvai Sivam St., Venkata Nagar Extn., Puducherry 605 011. |

I, (**P.V.Balakrishnan**) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

**sd..................................**

**(P.V. BALAKRISHNAN)**

Date : 01-03-2008

Signature of the Publisher.

## இம்மாதச் செய்தி

**மெய்யை**

**உடல் மெய்யாக**

**ஏற்ற வாழ்வு.**



# நெஞ்சில் உறையும் தெய்வம் - ஆத்மா

**N.** அசோகன்

நாடு பெற்ற விடுதலையை நாமும் பெறவேண்டும். நாம் விடுதலை பெறுவதென்றால் முடியாதது, முடியவேண்டும். அழும் குழந்தையைச் சிரிக்கவைப்பதும், காலம் கடந்தபின் கண்ணிறைந்த கணவன் அமைவதும், சரியும் மார்க்கெட்டில் கம்பெனியை லாபகரம் ஆக்குவதும், வறட்சியான பருவத்தில் பயிரிடுவதும், எல்லையில் நின்று மிரட்டும் எதிரியை எதிர்கொள்வதும் முடியாதவையாக மாறும் நேரம், நெஞ்சைத் தொட்டு ஆத்மாவை நினைவுகூர்ந்தால் 'அவை முடியும்' என மாறும். விடுதலை பெற்ற இந்தியா விருதாகப் பெற்று வரும் அனுபவம் இது.

மனிதன் என்பவன் மனத்தால் வாழ்பவன். மனத்தின் திறமைக்கு எல்லையுண்டு; ஆத்மா வரையறையற்றது.

காலையில் குழந்தைகள் பள்ளிக்குப் புறப்படும் நேரம், கணவன் பஸ்ஸைப் பிடிக்க வேண்டும்எனில் தினமும் வீடு அமர்க்களப் படுகிறது. 'இது இப்படித்தான்' என மனம் ஏற்கிறது; டென்ஷன் நிலைபெறுகிறது. பெரிய படிப்பு, சிபாரிசில்லாமல் நல்ல வேலை கிடைக்கவில்லை. சொற்ப சம்பளத்தைக் 'கர்மம்' என நாம் ஏற்கிறோம். இன்று வீடு கட்டாதாரில்லை. குடும்பம் பெரியதானதால், 'நமக்கு அந்த பாக்கியமில்லை' என முயற்சியைக் கைவிடுகிறோம். பாஷன் மாறியதால் மார்க்கெட்டே மறையும்போது 'நமக்கு மட்டுமா?' என மனத்தை அமைதி செய்துகொள்கிறோம். சுதந்தரம் வரும்முன் இது போன்ற தோல்விகள் 100க்கு 95. நாடு அன்னியனிடமிருந்து விடுதலை பெற்று சுமார் 20 அல்லது 25 ஆண்டுகள் ஆனாலும் நிலைமை மாறவில்லை.

40 வயதுக்குட்பட்டவர் இன்று சுதந்திர மண்ணில் பிறந்தவர். நாடு பெற்ற விடுதலை, உடல் பெற்ற விடுதலை. அடுத்து உயிரும், மனமும், ஆத்மாவும் விடுதலை பெறும் நேரம் 1970, 1980க்குப்பின்

வந்துவிட்டது. அன்று நடக்காதவை, இன்று ஓரளவு நடக்கின்றன.

''நாட்டை யார் ஆண்டால் என்ன? ஆத்மாவை யார் அடிமைப் படுத்த முடியும்? ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடும் அவசியமில்லை. ஆத்மசுதந்திரம் அனைத்தையும் சாதிக்கும்'' என்ற பொருள்பட மகாத்மா காந்திக்கு டால்ஸ்டாய் எழுதினார். பிறந்தமண் விடுதலை பெறாமல் ஆத்மா சுதந்திரம்பெற முடியாதுஎன்பது ஆன்மீகச் சட்டம். நம் நாடு பெற்ற விடுதலை 45 நாடுகளையும் விடுவித்தது. நாடு ஆயுதம் தாங்கி விடுதலைப் போராட்டம் நடத்தவில்லை. ஆத்ம சக்தியான சத்தியாக்கிரகத்தால் விடுதலை பெற்றது. கடந்த 20, 30 ஆண்டுகளாக இங்குமங்குமாக மக்கள் தங்களையறியாமல் அன்று மகாத்மா காந்தி பயன்படுத்திய ஆயுதத்தை அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படுத்துகின்றனர்.

அப்படி முயன்றால் முடியாததில்லைஎன்பது அனுபவம். சிறிய விஷயங்களிலிருந்து பெரிய கம்பெனி நிர்வாகம்வரை, தோல்வியின்றிச் செயல்படும் இச்சக்தியின் வெளிப்பாடுகளை எல்லாத் துறைகளிலும் விளக்கிக் கூறலாம்.

சுமார் பத்து, பன்னிரண்டு ஆண்டுகட்கு முன்பு வடநாட்டில் 40 கோடி கம்பெனி ஒன்றை மூட முடிவு செய்தனர். 40 கோடி செலாவணியும், ரூ.2 கோடி லாபமும் உள்ள கம்பெனி அது. ஆத்ம சக்தி தவறாதுஎன்ற அடிப்படையில் நிர்வாகத்துறை நிபுணர்கள் இக்கம்பெனி நிர்வாகத்தை அணுகி, ''கம்பெனியை மூடவேண்டிய அவசியமில்லை. மேலும் லாபம் 4 கோடியாகும்'' என்றனர். ''25 ஆண்டுகட்கு முன் டெக்னாலஜி மாறிய காலத்தில் சொற்ப விலைக்கு வந்ததால் அதை வாங்கினோம். இன்று எங்கள் சரக்கை உலகில் பயன்படுத்தும் கம்பெனியை விரல்விட்டு எண்ணலாம். மூடுவதே உசிதம்'' என்றனர். ஆயினும் நிபுணர்கள் சொல்லை ஏற்று, அவர்களை ரிப்போர்ட் தயார் செய்யச் சொன்னார்கள். 3 மாதத்தில் ரிப்போர்ட் 4 கோடி லாபமுள்ள இடங்களைக் காட்டியது. நிபுணர்கள் மூவர். அவர்களில் ஒருவர், ''நம் ரிப்போர்ட்படி லாபம் 4 கோடியாகும். மானேஜ்மெண்ட் இதன் சூட்சுமத்தை ஏற்றால் லாபம் 6 கோடியாகும். இரகசியத்தை ஏற்றால் 12 கோடியாகும்'' என்றார். ரிப்போர்ட் எழுத



வேண்டியவர் தம்மால் அப்படி எழுத முடியாது என்றார். முடிவாக 4, 6, 12 கோடி லாபத்தை குறிப்பிட்டு ரிப்போர்ட் எழுதப்பட்டது.

நிர்வாகி, ''வெளியிலிருந்து வந்த நீங்கள் 12 கோடி லாபத்தைக் கண்டுவிட்டீர்கள். நாங்கள் அதைக் கண்டுபிடிக்கிறோம்'' என்றார். இந்த ஆண்டு அந்தக் கம்பெனி 500 கோடி செலாவணியுடன் லாபகரமாயும் நடக்கிறது.

எப்படி ஆத்மாவை அன்றாட வாழ்வில் செயல்படச் செய்வது? அதற்குரியவை என்ன முறைகள்? அதைச் செய்தவர்கள் அனுபவங்களை விவரிக்க முடியுமா? என்பவை முக்கிய கேள்விகள். அத்தகைய அனுபவங்களை அதற்குரிய முறைகளுடன் விவரிப்பதை நோக்கமாகக் கொண்ட தொடரின் முதற்கட்டுரை இது.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உயிரைக் காப்பாற்றுதல், வளர்ச்சி; அடுத்த நிலைக்குப் போகும் வளர்ச்சி, பரிணாம வளர்ச்சி.

நாம் வாழும் நிலையில் எல்லாத் திறமைகளும் குறைந்தபட்ச அளவில் பூர்த்தியானால்தான் உயிர்வாழ முடியும். அடுத்த நிலைக்குப் போகும் வளர்ச்சிபெற இத்திறமைகள் அதிகபட்ச அளவில் பூர்த்திபெற வேண்டும். வளர்ச்சி இவற்றிற்கு இடைப்பட்டது. அடுத்த நிலைக்குப் போகும் வளர்ச்சி, மனிதனை அவனுள்ள நிலையிலுள்ள பல சிறு நிலைகளுக்கு உயர்த்த வல்லது. திறமையை வளர்த்தால் அனுபவம் பெற்று அடுத்த நிலைக்குப் போகலாம்.

***பரிணாம அனுபவத்தின் சாரத்தால் வளர்வது, அந்த சாரம் ஜீவனின் மூலை முடுக்குகளில் சேருகிறது.***

## அன்பர் கடிதம்

*ஓம் மதர் ஸ்ரீ அன்னை!*
*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய!*
*ஓம் ஆனந்தமயி சைதன்யமயி சத்தியமயி பரமே!*

கோடிக்கணக்கான அன்னை பக்தர்களில் நானும் ஒருத்தி. அன்னையை நான் அறிந்து 9 வருடங்கள் ஆகின்றன. இருப்பினும் கடந்த ஓராண்டாக நான் அன்னையை முழுவதுமாக உணர ஆரம்பித்தேன். எனக்காக அன்னை செய்த அற்புதங்கள் கணக்கில் அடங்காதன. அதைப் பற்றி நான் சொல்ல ஆரம்பித்தால் ஒரு தனி புத்தகமே போடலாம். அந்த அளவிற்கு நான் அன்னையை முழுவதுமாக அன்னையால் உணரப்பட்டேன். அதில் ஒன்று: என் மகன் B.E. இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டு இருக்கிறான். அவன் (Robo) project work IITயில் (2007 செப்டம்பர்) கலந்து கொள்ள ஆசைப்பட்டு apply பண்ணியிருந்தான். Motherஇன் அருளால் all over Indiaவில் உள்ள 211 காலேஜில் இருந்து இவன் முதலாவதாக இடம் பிடித்தான். IITயில் இருந்து அழைப்பு வந்தது, செப்டம்பர் மாதம் இவன் செய்த Wind Mill projectஐ செய்து காண்பிக்கும்படிக் கேட்டனர். ஆனால் காலேஜில் இவனுக்கு பர்மிஷன் கிடைக்கவில்லை. அது மட்டுமன்று, அன்றைய தேதியில் unit exam வேறு இருந்தது. என் மகன் என்னிடம் மிகவும் வருத்தத்துடன் புலம்பினான். நான் கூறினேன், “கவலையை விடு. பொறுப்பை மதரிடம் சமர்ப்பித்துவிட்டு, Wind Mill project workஐக் கவனி” என்றேன். மதரிடம் விடாது முறையிட்டேன். என்ன ஆச்சரியம், மறுநாள் என் மகனை டைரக்டர் அழைத்து O.D. கொடுத்து, “exam தள்ளிபோய் இருக்கிறது. இதுவரை இப்படி நடந்தது இல்லை. நீ மிகவும் lucky” என்றாராம். என் மகன் என்னிடம் மிகவும் நன்றியுடன் தெரிவித்தான். “மதருக்கு நன்றி சொல்” என்றேன். IIT Competitionஇல் உரிய தினத்தன்று கலந்து, அதில் அவன் முதலாவதாக வெற்றி பெற்றான். IIT Certificate கிடைத்துள்ளது. இது மட்டுமன்று, அன்னை தினம் தினம் எனக்கு அற்புதங்கள் நிகழ்த்திக்கொண்டுள்ளார்.

❀ ❀ ❀



## ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

N. அசோகன்

**181.** **மந்திரங்களுக்கு நிறைய ஆன்மீக சக்தி உண்டு. அவற்றைச் சரியான முறையில் நாம் உச்சரித்தோம்என்றால் அற்புதமான விளைவுகள் நிகழும். "ஜீவ மந்திரம்என்ற ஒன்றை நாம் சொன்னோம்என்றால், இறந்தவர்கள் கூட உயிர் பெறுவார்கள்" என்று அன்னை சொல்கிறார்.**

**182.** **ஓர் அறிவுரை பலிக்க வேண்டும் என்றால், கேட்பவர் அறிவுரையை ஏற்கும் மனோபாவத்துடன் அந்த அறிவுரையை வழங்குவதற்கு ஏற்ற நபரை அணுக வேண்டும்.**

**183.** **ஒருவர் கேட்காத அறிவுரையை அடுத்தவர் வழங்கினால், கேட்பவருக்கு எரிச்சல் வந்து விளைவுகள் எதிர்மாறாக இருக்கும்.**

**184.** **கண்டிப்பு தேவைப்படுகின்ற இடத்தில் வெறும் அறிவுரை பலனளிக்காது. அப்படியே கண்டிப்புச் செய்தாலும், அதிகாரத்தில் உள்ளவர்கள் செய்கின்ற கண்டிப்புத்தான் செல்லும்.**

**185.** **தன்னைச் சுயக்கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர்களுக்கு அறிவுரையோ, கண்டிப்போ தேவைப்படாது. ஏனென்றால் அந்தச் சுயக்கட்டுப்பாடு பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக உள்ள உணர்ச்சி வயப்பட்ட செயல்பாட்டைத் தடுக்கிறது.**

**186.** **தம்முடைய வாழ்க்கையை வீணாக்கிக்கொள்கின்றவர்கள் அறிவுரை கிடைக்காமலோ, கண்டிக்க நபரில்லாமலோ அப்படி வாழ்க்கையை வீணாக்கிக்கொள்வதில்லை. அறிவுரை கிடைத்தாலும், கண்டிக்கப் பட்டாலும், இவற்றைக் கருதாமல் உணர்ச்சி வயப்பட்டுச் செயல்படுவதால் தான் வாழ்க்கை வீணாகிறது.**

**187.** **ஆன்மீகப் புத்தகங்களிலிருந்து கிடைக்கும் குறிப்புகளை நம்மால் சரியாகப் புரிந்துகொள்ள முடியும் என்றால் நம்முடைய எதிர்காலத்திற்கு ஒரு நல்ல வழிகாட்டல் கிடைக்கும்.**

188. இறைவனின் தருணம் இப்பொழுது நிலவுவதால், முன்பு சிரமப்பட்டுச் செய்த காரியங்களை இப்பொழுது சுலபமாக நிறைவேற்றிக்கொள்ளலாம். வேலையின் பளுவைச் சூழல் வாங்கிக்கொள்வதால் வேலையை நாம் துவக்கி வைத்தால் மட்டும் போதும், சூழல் வேலையை முடித்துக்கொடுத்துவிடும்.

189. Life Divine புத்தகம் படைப்பின் ரகசியங்களை விவரித்துள்ளது. ஆகவே இப்புத்தகத்தைப் படித்துப் புரிந்துகொண்டவர்கள், தமக்குப் படைக்கும் திறனைப் பெற்றுக்கொண்டுள்ளார்கள் என்றும் கூறலாம்.

190. Life Divine, Synthesis, Savitri ஆகிய மூன்றிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள அறிவு ஒன்றுதான். Life Divineஇல் தத்துவமாகவும், Synthesis of Yogaவில் யோக ரீதியாகவும், சாவித்ரியில் கவிதை நயமாகவும் ஒரே விஷயத்தை விளக்கியுள்ளார்.

191. அடக்கமும், கீழ்ப்படிதலும் ஒன்றுஎன்று சொல்ல முடியாது. தன்னுடைய நிலைமை தாழ்ந்து இருப்பதால் அடங்கிப்போதல் கீழ்ப்படிதலாகும். ஆனால் அடக்கம்என்பது அகம்பாவம் இல்லாததால் வருவதாகும்.

192. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு முனைந்து செயல்பட வேண்டும். ஆனால் ஆன்மீகத்தில் முன்னேறுவதற்கு அப்படி முனைந்து செயல்படுவதை விட வேண்டும்.

193. உடைமைகளை நாம் விட்டுக்கொடுப்பது சுலபம். ஆனால் அகம்பாவத்தை விடுவது அவ்வளவு சுலபமில்லை. அகம்பாவம் தானே சரணமடைவது என்பது மிகவும் ஓர் அரிய செயலாகும்.

194. நம்முடைய அகம்பாவத்தை எடுக்கச் சொல்லி நாம் அன்னையிடம் கேட்கலாம். அகம்பாவம் தானே விலகாவிட்டாலும் அன்னையின் சக்திக்கு கட்டுப்பட்டு விலகும். ஆன்மாதான் நம்முடைய உண்மையான ஜீவன். அது மேலெழுந்து வந்து தான் இருக்க வேண்டிய இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் அகம்பாவத்தை வெளியேற்றும்படி அன்னையை உதவிக்கு அழைத்தால், அன்னை சந்தோஷமாக அகம்பாவத்தை வெளியேற்றுவார்.

195. சத்தியஜீவியத் திருவுருமாற்றம் நிகழும்பொழுது நம்முடைய சைத்தியப் புருஷனுக்கு ஒரு திட வடிவம் கிடைக்கும்என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. அப்படி சைத்தியப் புருஷன் திட வடிவம் பெறுவதுதான் சத்தியஜீவிய மனிதனுக்குக் கிடைக்கும் வடிவமாக அமையும்.



196. உருவம் இல்லாத உயிரும், உருவம் உள்ள உடம்பும் சேர்ந்து செயல்படுவது முரண்பாடான இரண்டு விஷயங்கள் உடன்பட்டுச் செயல்படுவதற்கு நல்ல உதாரணமாகும்.

197. கடவுள்களுக்குப் பூமி அளவிற்கு வடிவம் பெரிதாக இருக்கிறது. அன்னையின் கருத்துப்படி மழை, காற்று போன்ற இவற்றிற்கும் வடிவம் உண்டு. மனிதனுடைய முழுஉருவம் எறும்புக்குத் தெரிவதில்லைஎன்பது போல மழை, காற்றுபோன்ற ஜீவன்களின் பிரம்மாண்ட வடிவமும் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை.

198. அன்னையின் கருத்துப்படி நாம் கிருமிகள்என்று சொல்வது தீய சக்திகளிடமிருந்து கிளம்பும் அதிர்வலைகள் திட வடிவம் பெறுவதுதான்.

199. எண்ணங்களுக்கு வடிவம் இல்லைஎன்றாலும், அவைகளும் உண்மையான வஸ்துக்கள்தாம். ஓர் எண்ணம் முழுமை பெறும்பொழுது எய்யப்படும் அம்பு குறியை நோக்கிச் செல்வதுபோல உருவாகிய எண்ணமும் தன்னைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு முயல்கிறது.

200. நிறம், வடிவம் சம்மந்தப்பட்ட சூட்சும உலகங்கள் இருக்கின்றன. கலைஞர்களுக்குக் கிடைக்கின்ற உள்ளெழுச்சி அந்த உலகங்களிலிருந்து தான் வருகிறது.

தொடரும்.....

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எல்லா நாகரீகங்கட்கும் பெரும்பண்புகளை உற்பத்தி செய்யும் அடிப்படை சொத்தும் சுதந்திரமும் ஆகும். மாறாகப் பெரிய நாகரீக உயர்வைநாட உயர்ந்த பண்புகளைத் தேட வேண்டும் என்றாகிறது.

*சொத்தும் சுதந்திரமும், கல்வியும் பண்பாக மாற வேண்டும்.*

# எந்தையும் தாயும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

சியாமளாராவ்

முதல் தேதி வந்தது. அன்று முழுவதும் இனம் புரியாத பரபரப்பு உடல் முழுவதும் பரவியிருந்தது. அதுவும் அன்று அன்னை, ஸ்ரீ அரவிந்தரையும் பார்க்கப்போகிறோம்என்பதே பாகீரதிக்குள் ஒரு சிறுபெண்போல சரீரத்தில் ஒரு துள்ளல், எதிர்பார்ப்புகள். அவளே நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு வீடெல்லாம் இரண்டு நாட்களாய் சுத்தம் செய்வதும், பூக்களை அடுக்குவதுமாக வயதுக்கு மீறிய சுறுசுறுப்பாய் இருந்தாள்.

மாலை, டிபன் சாப்பிட்டுவிட்டு நேரே தியானமையம் சென்றார்கள். நுழைவு வாசலிலேயே சிரித்த முகத்துடன் அமர்ந்திருந்த பெண்மணிகளைப் பார்க்கவே மனது நிரம்பியது. ஒருவர் பூக்களை அலசி, ஆராய்ந்து ஒரு கூடையில் போட, இன்னொருவர் அதை ஒரு கவரில் போட்டு, அழகுற மடித்து ஒரு பிளாஸ்டிக் கூடையில் அடுக்க, தியான மையத்திலிருந்து வெளியேறுபவர்களுக்கு ஒருவர், பூ பேக்கட்டைத் தர, எல்லாமே, பேச்சுக்களோ, அனாவசிய அரட்டைகளோயின்றி, ஓர் அமைதியே கோலோச்சுவதாகயிருந்து, அந்த இடமே புனிதமாக, ஒரு பக்திச் சூழலிலிருந்தது.

எங்கு பார்த்தாலும் அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் தரிசனம். மனது நிரம்பியது. நடுவில் ஓர் அறையில் விஸ்வரூப தரிசனம்போல் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் அமர்ந்திருந்தார்கள்.

அதற்குமேல் பாகீரதியால் தாங்க முடியவில்லை.

மெய் சோர, மனம் முழுவதும் அன்று, சரீரம் பூராவுமே, அவர்கள் இருவருமே, ஒவ்வொரு நரம்பிலும், தந்துகிகளிலும் அவளுள் புகுந்து



கொண்டு, தங்களின் கருணையையும், அன்பையும் வாரி வழங்கினர்.

அந்த அதிர்வை ஏற்றுக்கொள்ள பாகீரதியின் சரணாகதி மிகவும் உதவியாக இருந்தது. ஆனால், இந்த மாற்றங்கள் அவளுள் நிகழ்வதும், அவளுடைய சரீரம் ஏற்றுக்கொள்வதும், அவளுக்கே, அவளே அறிய முடியாமலே நடந்தது.

கண்களை மூடி அமர்ந்திருந்தவள், மனதின் சிந்தனைகள் நெளியும் மண்புழுக்களாக அவளுள் போராட்டமாகயிருந்ததை ஒன்றுமே அவளால் உணர முடியாதபடி அயோமயமாய் அமர்ந்திருந்த பாகீரதிக்கு, அவைகளெல்லாம் அடங்கி, ஒடுங்கி, அவளிடமிருந்து விடுபட்டுக் காணாமல் போனதும் புரியவில்லை. ஆனால், திடீரெனத் தன் சரீரம் பூராவுமாய் ஓர் அமைதி, சாந்தம் பரவுவதை சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டாள். மூடிய இமைகள் மூடியபடியே இருக்க, முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது, அவளே அறியாமல். பரவசம், பரவசம், பரவசம். சம்மணமிட்டு அமர்ந்திருந்தவளின் இரு கரங்களும் இணைந்து குவிந்திருக்க, மூடிய விழிகளுக்குள் அவளுக்கு என்ன தெரிந்ததுஎன மற்றவருக்குப் புரியவில்லைதான். ஆனால் அவளது சிரம் லேசாக அசைந்தபடியும், அதரத்தில் சிரிப்பு தவழ்ந்த படியுமிருக்க, அவளுக்கும் அன்னைக்கும் ஸ்ரீ அரவிந்தருக்குமிடையே நடப்பது என்ன?

கௌதமும் ஒரு புறம் அதேபோல் அமர்ந்திருந்தான். நாகராஜன் ஒன்றும் புரியாமல் அன்னை, ஸ்ரீ அரவிந்தரைப் பார்த்து கை கூப்புவதும், பாகீரதியையும், கௌதமையும் பார்த்து ஒன்றும் புரியாமல் விழிப்பதுமாக அமைதியாக அமர்ந்திருந்தார். ஆனால், அவர் மனதில் எந்தவிதமான சஞ்சலமுமில்லை, அமைதியாகவேயிருந்தார் என்பதை அவரே அறியவில்லை.

அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் பார்வை நம் மீது பட்டாலே போதுமே. நாம் நம் சாதாரணக் கண்களின் சாதாரணப் பார்வை மூலம்தான் பார்க்கிறோம். மனதிற்கு வேண்டியதைக் கேட்கிறோம். நம் விருப்பத்தை மட்டுமே எண்ணி, அன்னையின் விருப்பம் என்னஎன்பதை அறிந்து கொள்ளும் திறனற்றவர்களான நாம், நம் இச்சைக்கு இசைந்தபடி

அன்னையைக் கேட்டுத் தொந்தரவு செய்கிறோம் என்பதே நிதரிசன உண்மை. அன்னையின் விருப்பத்திற்கு விட்டு விடுவோம். நம் அபிலாஷைகள் அப்போது அதிவேகமாக, ஒன்றன்பின் ஒன்றாகத் தானே நிறைவேறி வருவதை உணர்வுபூர்வமாகத் தெரிந்து கொள்ளுவோம். ஆமாம், நம் எண்ணங்களை அன்னையிடம், ''சமர்ப்பணம் அம்மா'' என்று கூறி, அதை நாம் மறந்துபோனாலும் தவறேயில்லை. அன்னைக்குத் தெரியும், நமக்கு எதை முதலில் தர வேண்டும், எதை நிதானமாகத் தரவேண்டும், உடனடியாக நம் தேவை என்னஎன்பதை நம்மைவிட அன்னைக்குத்தான் தெரியும். இதுவும் நிதரிசனமான உண்மை. ஆனால் சாதாரண மனிதர்களாகிய நாம், நம் தேவைகளை உடனுக்குடன் அன்னை தரவேண்டுமென வேண்டுகிறோம். எப்படி? ஒருவித, நமக்கே புரியாதபடி ஒருவிதமான பிடிவாதத்துடன்தான் வேண்டுகிறோம். இதற்கு நமக்கு நாமே சமாதானம் சொல்லிக்கொள்ளும் சப்பைக்கட்டு என்ன தெரியுமா? ''அன்னையே, நீங்கள் எனக்கு அம்மாதானே, நாங்கள் உங்களுடைய குழந்தைகள்தாமே. உங்களுடைய குழந்தைகளுக்கு, நீங்கள் கேட்டதைத் தர மாட்டீர்களா?'' 'தந்துதானே ஆகவேண்டும்' என்கிற உரிமை அப்போது நம் மனதில் திடகாத்திரமாக உட்கார்ந்திருக்கும். இது தவறு அன்று. நாம் குழந்தைகள்தாம். அன்னை நமக்குத் தாய்தான். தாய் என்ன செய்வாள்? நல்லதைக் குழந்தைகளுக்குத் தருவாள். அதுவும் குழந்தைகளுக்கு எவ்வெப்போது, எதெது தேவையோ அதைத் தவறாமல் ஒரு தாயால்தான் தர முடியும். தரமுடியும் என்பதில் மட்டுமன்று, தந்தே தீருவாள் என்பதுதான். அந்தச் சமயத்தில் நமக்கு அது பிடிக்காமல், வேறொன்றுக்கு அடம்பிடிப்போம். கொடுத்ததை திருப்தியாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மனிதர்களாகிய நமக்கு இல்லவேயில்லை. அந்த மனப்பக்குவத்தை நம்மிடம் வளர்த்துக் கொண்டாலே போதுமே. அன்னை அப்பேர்ப்பட்ட குழந்தையாகிய நம்மைத் தாவி ஓடிவந்து அணைத்துக்கொள்வாரே.

சரசரவென்ற சத்தம் பாகீரதி, கௌதமை மெல்ல அசைய



வைத்தது. நிதானமாய் விழிகளின் திரையாகிய இமைகளைத் திறந்தார்கள். பாகீரதியின் மெய் சிலிர்த்தது. அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் அவள் கண்களுக்குப் பிரகாசமாகத் தெரிந்தார்கள். வீழ்ந்து வணங்கி, சரீரம் பூராவும் ஒரு மகிழ்ச்சித் துள்ளல் ஊடுருவ மனதிருப்தியுடன் எழுந்து நடந்தாள்.

மூவருமாய் பூக்களின் பிரசாதத்தை வாங்கியபடியே ஒருவருக்கு ஒருவர் பேசவேண்டுமென்ற எண்ணமேயில்லாமல் காரில் ஏற, கார் விரைந்து வீட்டையடைந்தது.

⇛⇛⇛⇛⇛

''அம்மா.... கும்முனு வாசனை வாசல் வரைக்கும் வர்றது. என்னம்மா சமையல்?''

உள்ளங்கையைத் தேய்த்தபடி டைனிங் டேபிளின் மேல் இருந்த தட்டை சாப்பிட வைத்துக்கொண்டபின் தண்ணீர் ஜக்கிலிருந்து தண்ணீரை டம்ளரில் ஊற்றிக்கொண்டான் கௌதம்.

ஹோட்டலில் சாப்பிட்டு அலுத்து, மரத்துப்போன நாக்குக்கு ருசிருசியான கைப்பக்குவத்தோடு கிடைக்கும் சமையல் நாக்கை சப்புக்கொட்டியபடி சாப்பிட வைத்தது. ஏனோ கண்கள் நிறைந்தது; நாசியும் சிவந்து விடைத்தது.

''கௌதம், என்னப்பா... ரொம்ப காரமாயிருக்கா... நாளையில் இருந்து காரம் கம்மியா போடறேன். இந்தாப்பா.... ஜலத்தைக் குடி. கொஞ்சம் சர்க்கரைக் கொண்டு வரவா....''.

பரிதவித்துக் கேட்கும் பாகீரதியின் வார்த்தைகளில் நொறுங்கியே போனான் கௌதம்.

''அம்மா.... அம்மா... வேண்டாம்மா.... இந்தப் பாசம், நேசம், இது எல்லாம் எனக்குக் கூடவே கூடாதும்மா. ஆமாம்மா, அதையெல்லாம் துச்சமா மதிச்சு, தூசியா ஊதினவன் நான்... ம்மா.... ம்மா...''.

பாகீரதி கௌதமின் அருகில் நின்றாள். அவன் சிரத்தையும், முதுகையும் ஆதுரமாகத் தடவினாள். அவள் கண்களிலும் நீர் ததும்பியது.

‘‘கௌதம்... அன்னத்தின் முன்னாடி உட்கார்ந்து அழலாமாப்பா? நீ அன்னையைப் பத்தி நிறையப் படிச்சும் அனுபவப்பூர்வமாவும் உணர்ந்திருக்கே. அதனால மனோதிடத்தை அதிகப்படுத்திக்கோ. உணர்ச்சிவசப்படறதுல தப்பேயில்லே. ஆனா, அதையும் உடனே அடக்கத் தெரிஞ்சுக்கணும்பா. ‘அடக்கம் அமரருள் உய்க்கும்’னு நீ படிச்சதில்லையா? எதுவானாலும் எங்கிட்டே சொல்லு, சரியா..... சரி, சரி, நாழியாயிடுத்து, சாப்பிடுப்பா....’’.

கண்களின் துளிகள் தட்டில் விழாமல் அப்படியே கண்ணுக்குள் அடக்கத் திண்டாடித்தான்போனான் கௌதம்.

சாப்பாடு முடிந்து ஆபீசுக்குச் சென்றவனின் மனம், வழியிலேயே பலவிதமான பிரிவுகளாகப் பிரிந்து, ஒவ்வோர் இடத்திலும் முட்டி, மோதிக்கொண்டு மீண்டும் அவனுள்ளேயே புகுந்து ஆட்டம் போட்டது.

முடியவில்லை, அடக்கத் தெரியவுமில்லை. அதனால் பாதி வழியிலேயே வீட்டை நோக்கிக் காரைத் திருப்பியவன், ‘செல்’லிலேயே ஆபீசுக்கும் தகவல் அனுப்பிவிட்டான், உடல்நிலை சரியில்லாததால் அன்று லீவு வேண்டுமென. சாப்பிட்ட சாப்பாடு, வாந்தி வரும்போல் இருந்தது. தலைக்குள் பலவிதமான நினைவுகள் ஆட்டிப்படைக்க, தலைவலி மண்டையைப் பிளந்தது.

காரை வீட்டின்முன் நிறுத்தியவன், அதற்குமேல் முடியாமல் அங்கேயே ஒக்காளித்து வாந்தியை எடுத்தான்.

சத்தம் கேட்டு வாசலுக்கு ஓடி வந்த பாகீரதி, ‘‘கந்தா... கந்தா... சீக்கிரமா வாப்பா.... வா’’ நடுங்கும் குரலில் பயத்தோடு கத்த, கந்தன் ஓடித்தான் வந்தான்.

கௌதமின் நிலையைப் பார்த்து பயந்தே போனவன், சட்டெனத் தெளிந்து, தண்ணீரைக் கொணர, பாகீரதி அதை வாங்கி கௌதமின் முகத்தில் தெளித்து, சட்டையையும் தளர்த்தினாள். தன் மடியில் அங்கேயே படுக்கவைத்தபடி அவன் முகத்தைத் துடைத்தாள்.

அவளின் இதயம், ‘அன்னையே சரணம், அன்னையே சரணம்’ என்றுதான் துடித்தபடியிருந்தது. மெல்ல கந்தனும், பாகீரதியும்



அவனைப் பிடித்துத் தூக்கியபடியே உள்ளே வந்தனர். சட்டெனப் பாகீரதி கந்தனிடம் கூறினாள், ‘‘கந்தா, ஐயாவை இங்கேயே அன்னை, ஸ்ரீ அரவிந்தர் முன்னாலேயே படுக்கவைக்கலாம்பா. அவங்களைவிட சிறந்த வைத்தியர் யாரிருக்காங்க?... ம்..... படுக்கவைப்பா.....’’ கௌதமின் சரீரத்தில் படும்படியாக Life Divine புத்தகத்தை வைத்தாள் பயபக்தியுடன்.

உணர்வற்றிருந்த கௌதமைப் படுக்கவைத்தபின், பாகீரதி தன் கரங்களைச் சுத்தம் செய்துகொண்டு, ஊதுவத்தி ஏற்றி, அன்னை, ஸ்ரீ அரவிந்தர் முன்னால் வைத்து, சம்மணமிட்டு அமர்ந்து தியானித்தாள்.

மெல்ல அசைந்த கௌதம், உணர்வு திரும்பியதில் ஒரே ஒரு கணம், தனக்கு என்ன நடந்தது எனப் புரியாமல் திகைத்தவன், மறுகணம் புரண்ட நினைவுகளில் தன்நிலையை உணர்ந்தான். எழுந்தவன் கண்களில் பாகீரதியின் தியானம் புரிந்தது. கண்கள் நிரம்ப, நெகிழ்ச்சியுடன் தானும் வணங்கி, குளியலறைக்குள் சென்று குளித்தான். வேறு உடை மாற்றி, சத்தமின்றி தானும் தியானத்தில் அமர்ந்தான்.

எழுந்து வணங்கினான், மனம் கசிய. அப்போதும் பாகீரதி கலையவில்லை. அவள் கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டிருந்தது. சத்தமிடாமல் நாகராஜன் அருகில் அமர்ந்தான்.

‘‘அப்பா, தினமும் சாப்பிட வேண்டிய மருந்து சாப்டீங்களா? கஞ்சி குடிச்சீங்களா? பசிச்சா, நான் உங்களுக்கு சாப்பாடு போடறேன், வாங்கப்பா. வாங்க....’’.

‘‘கண்ணா.... என்னப்பா ஆச்சு? ஏன் அப்படி ஒரு வாந்தியெடுத்தே? மயங்கிப்போனே? பயந்துட்டேம்பா. நானும் ‘ஓம் ஸ்ரீ அரவிந்தாய நம:’’ என்று சொல்ல ஆரம்பிச்சேன். எனக்கு உன்னைப்போலவோ, பாகீ மாதிரியோ, தியானமெல்லாம் செய்யத் தெரியலே. ஆனா, ஸ்ரீ அரவிந்தரை மட்டும் நினைச்சுண்டு வேண்டிக்கணும்னு தோணுச்சு. அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் மாறி, மாறி இங்கிருந்தே பார்த்து வேண்டிண்டேன். அழுதேம்பா. எங்கே.... என் அழற சத்தம்

கேட்டு.... கேட்டு....'' மேலே பேச்சு வராமல் விசும்ப ஆரம்பித்தவர், கௌதமைத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டார்.

''அப்பா, ப்ளீஸ்பா.... அழாதீங்க. காருல வரும்போதே வயத்தை என்னமோ பண்ணித்து, புரியலே. என் ஃபிரெண்ட்தான் சாப்பிட கொஞ்சம் பட்சணம் கொடுத்தான். மத்தபடி எதுவுமே சாப்டலேப்பா. அவனும் எனக்கு ரொம்ப நல்ல நண்பன். என்னமோ.... இன்னிக்கு இப்டி ஆபீசுக்குப் போக முடியாம....''.

''எல்லாம் நன்மைக்கேன்னு நினைச்சுக்கப்பா. காரண, காரியம் இல்லாம அன்னை உன்னை வீட்டுக்கு வரச் செய்திருக்கமாட்டார். எதுவானாலும் மனசுல வச்சுண்டு குழம்பாதே. இதை நான் சொல்லணுமான்ன? உனக்கே தெரியுமேப்பா....'' அப்போது வந்த பாகீரதி கூறவும், அவளைப் பார்த்து, 'ஆமாம்' என்பதுபோல் தலை அசைத்து சிரித்தான்.

சிறிது நேரத்திலேயே அவனுக்கு ஆபீஸிலிருந்து ஃபோன் வந்தது.

''நீங்க வாராதது நல்லதாச்சு. இங்கே ஒரே அமளி, துமளி சார். திடீர்னு இன்ஸ்பெக்ஷனுக்குன்னு வந்தாங்க. ஒண்ணுமே புரியலே. யாருக்கும் தெரியாததால, அவங்க இன்ஸ்பெக்ஷனுக்கு வந்தவங்கன்னு புரியாம, அவங்கவங்க வேலையில மூழ்கியிருந்தது, அவங்களுக்குக் கோவம் வந்து கத்துனாங்க. ஆனா, உள்ளேயிருந்த நம்ம ஆபீசர் கோபாலன் ஃபோன்ல என்னமோ பேசினாரு; மறுபடியும் ஃபோன்ல பேசினாரு. வந்தவங்க பொய்யான ஆளுங்கன்னு போலீஸ் வந்தப்புறம்தான் தெரிஞ்சுது சார். அவங்க எதுக்கு வந்தாங்க, ஏன் வந்தாங்கன்னு ஒருத்தருக்கும் புரியலே. போலீஸ் வந்தபிற்பாடுதான், அவங்க எங்கேயோ திருடிட்டு, இங்கே ஒளிஞ்சுக்க வந்தவங்க ஆடின நாடகம்னு தெரிஞ்சுது. சார், உங்க இடத்துல ஏதோ வேலையா உட்கார்ந்திருந்த நம்ம ரத்தினம் சாருக்குத்தான் காயம். மத்தபடி அதிகமா யருக்கும் அடிபடவுமில்லே.... அந்தப் பணம் போகலே. உங்களுக்கு என்னாச்சு சார்? ஏன் வரலே?....''

ப்யூன் ராமசாமி இவனுக்கு ஃபோன் செய்து கூறினபோது விக்கித்துத்தான்போனான் கௌதம்; அவன் விழிகள் கசிந்தபடியே



அன்னையை நோக்கின; அதரம் நன்றியைக் கூறியது; இதயமோ 'அன்னையே சரணம், அன்னையே சரணம்' என்றே ஜபித்தது.

என்றுமில்லாதபடி இன்று, தான் சாப்பிட்ட உணவிலும் எந்தவிதமானக் கோளாறுமில்லாதபடியிருந்தும், அன்னை எனக்கு வந்த ஓர் ஆபத்தை, என் உடல்நலத்திலேயே ஒரு சிறிய குறைபாட்டை வழியிலேயே தந்து, எனக்குப்பதிலாக அந்த இடத்தில் உட்கார்ந்து இருந்தவருக்கும் அதிகம் அடிபடாமல் காத்து, என்னையும் அங்கு போவதைத் தவிர்த்து, எனக்கு வரயிருந்த ஆபத்தைத் தடுத்து....

மனம் பொங்கிப் பொங்கித் தணிந்தது.

'அன்னையே.... உங்களுடைய இத்தனை அரவணைப்புக்கும் நான் அருகதையா? இந்தக் கேள்வி என் மனதைவிட்டு அவ்வப்போது அகலாமல் துளைக்கிறதே. என்ன செய்வேன்? என் தவற்றை உணர்ந்து விட்டேன். ஆனால் எப்போதுமே, என் பெற்றோரின் உயிர் போகும் வரை நான் செய்த அநியாயங்கள், கொடூரங்கள், எல்லாமே சில சமயங்களில் என்னை வதைக்கிறது. ஆனால் இப்போது உணர்ந்து பயனில்லைதான். உங்களைச் சரணடைந்தபின், என் மனம் எப்போதாவது அவர்களை நினைத்து சஞ்சலமடைவதைத் தடுக்க முடியவில்லையே... அன்னையே, அதற்கும் உங்களை விட்டால் வேறு யாரிருக்கிறார்கள்? வழிகாட்டுங்கள் தாயே.... வழிகாட்டுங்கள் தாயே....'

''அம்மா..... என்னம்மா.... அம்மா.... அம்மா... நீங்க சொன்னது போலவே இன்னிக்கு ஆபீசுல ஒரு கலவரம் நடந்திருக்கு. போலீஸ் வந்துருக்காங்க. என்னோட ஸீட்டுல உட்கார்ந்திருந்த ரத்தினம் என்கிறவரை கத்தியால குத்தியிருக்காங்க. ஆனா, அதுக்குள்ள போலீஸ் வந்து அவங்களையெல்லாம் பிடிச்சுட்டாங்களாம். ரத்தினம் சாருக்கும் நல்லவேளைப் பெரிய காயமில்லையாம்மா.... அம்மா...''.

''அம்மாதான் சொன்னேனேப்பா.... காரண, காரியமில்லாம அன்னை எதையும் செய்யமாட்டாங்கன்னு, நீ சொல்லித்தானேப்பா நானே தெரிஞ்சுண்டேன். அம்மா இப்ப சொல்றேன், எழுந்து வா. ஹார்லிக்ஸ் கரைச்சுத் தரேன். குடிச்சுட்டு ரெஸ்டெடு, வாப்பா...''.

பொறி தட்டியது.

‘அம்மா சொல்றேன், அம்மா சொல்றேன்’ என்பதை பாகீரதி கூறவும் பொட்டிலடித்தாற்போல் கண்கள் விரிய அதிர்ந்தேபோனான் கௌதம். இதயத்தினுள் ஏதோ நுழைந்து பிசைந்தது. அவனுடைய தவற்றை எல்லாம் அன்னை மன்னித்துவிட்டாரா? எனக்காகத்தான் இந்த வயதான தம்பதியை எனக்குப் பெத்தவங்களாக அனுப்பி இருக்கிறாரா? அன்னையே.... அன்னையே.... இந்த நீசத்தனமான-வனையும் மன்னித்து.... எத்தனை இளகிய, கனிந்த உள்ளம் உங்களுக்கு. ஆமாம்... நீங்கள்தான் உலகத்திலுள்ளவர்களுக்கே தாயாயிற்றே. அதில், எங்கோ.... என்னை.... இந்த சின்னஞ்சிறு துளியை எடுத்து, உங்களை வணங்கச் செய்து, ஆஸ்ரயித்து, அரவணைத்து, என்னைப் பொறுப்பாக, பாதுகாக்கத் துணையாய், பெற்றவர்களைப்போல் ஒரு கணவன், மனைவியைச் சந்திக்கவைத்து, இன்று.... இன்று.... நான்... நான்... அன்னையே, என்னால் தாங்கவே முடியவில்லையே.... இத்தனை அன்பா என்மேல்? இத்தனைப் பாசமா என்மேல்? இத்தனை அனுதாபமா என்னிடம்? என்னை மன்னித்து ஏற்றுக் கொண்டுவிட்டீர்களா? நான் செய்த பாவங்களை என்னிலிருந்து விலக்கி விட்டீர்களா? விலக்கியேவிட்டீர்களா?.... என்னால் உங்கள் அன்பையும், ஆதரவையும், அணைப்பையும் ஏற்றுக்கொள்ள நான் அருகதையானேன்என்று நினைக்க, நினைக்க மனம் புல்லரித்து, காற்றில் பறக்கும் அளவுக்கு, கனமற்று, பாரமற்று, மயிலறகுபோல் ஆகிவிட்டேனே.... அன்னையே நன்றி.... அன்னையே நன்றி.... அன்னையே நன்றி... நன்றி.... வேறென்ன என்னால் செய்ய முடியும் அம்மா... அம்மா....’.

இதயத்துள் கதறல் வேகமாக எழுந்தது. ஆனால், வெளியே அமைதியாகயிருந்தாலும், கண்கள் தங்கள் வேலையைப் பொறுப்பாகச் செய்ததில், முகம் சிவக்க, உதடுகள் துடிக்க, கண்ணீர் வழிந்தது. கண்கள் திறக்கவில்லை; ஆனால் மனம் என்னும் பெட்டகமோ சத்தம் இன்றித் திறந்தேவிட்டது. அதில் அடைக்கப்பட்டிருந்த அடைசல்கள் எல்லாமே முண்டியடித்தபடி வெளியேறியது கண்கள் வழியாக.

மனதிலிருந்த பாரமெல்லாம் அதில் கரைந்துபோனது. மனதில் இருந்த அழுக்கெல்லாம் அந்தக் கரைசலுடன் கலந்து வெளியே ஓட்டமாய் ஓடியேபோனது.

திடீரென விதிர்த்துப்போய் கண்களைப் ‘படக்’கெனத் திறந்தான் கௌதம். வீடே பிரகாசமாய், வெளிச்சத்துடன் இருந்தது. அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் திருமுகங்கள் வெகுஅழகாக, ஆனந்தமாக, பெரியதாகச் சிரிப்பது புரிந்தது. அவனறியாமலே அவன் உதடுகள் விரிய வாய்விட்டு சிரித்தான். கௌதம் அன்றிலிருந்து புதிய பிறவி ஆனான்.

சட்டென பாகீரதியை நோக்கிச் சென்றான், மகிழ்வோடு. ‘‘அம்மா, ரொம்ப பசிக்கிறதும்மா. ஏதாவது டிபன் செய்றீங்களாம்மா. அப்பா, நீங்க சொல்லுங்க... என்ன வேணும்பா.... சொல்லுங்க.... கடைக்குப் போய் வாங்கிண்டு வரலாம், சொல்லுங்கப்பா....’’.

பாகீரதியும், நாகராஜனும் அவனையே பார்த்தார்கள். அந்தப் பார்வையில் பிரமிப்புத் தெரிந்தது.

இத்தனை நாளும் ஏதோ ஒருவித குற்ற உணர்வில், தப்பு செய்து விட்டோமே என்கிற சுயபரிதாபத்தில் சோபையற்றிருந்த அவனது முகத்தில் எத்தனைப் பிரகாசம்! எத்தனைத் துடிதுடிப்பு! எத்தனை சந்தோஷம்! எத்தனைத் துள்ளல்! ம்மாடி.... இதெல்லாம் இத்தனை நாள் எங்குப் போய் ஒளிந்திருந்து, இன்று அப்படியே ஓடி, ஓடி வந்திருக்கிறதே....

ஆச்சரியப்பட்டுப்போனார்கள் பாகீரதியும், நாகராஜனும். இத்தனை நாட்கள் மனதுள் அழுத்தப்பட்டிருந்த அத்தனையும் கழன்று கீழே விழுந்து மறைந்தது போலிருந்தது, அவர்களுக்குத் தெரிந்து இருக்கவில்லையென்றாலும், அவனிடம் ஏற்பட்டுள்ள மாறுதலை உணர்ந்தார்கள். அவர்கள் மனதும் நிம்மதியை எட்டியது.

இருவருமே ஸ்ரீ அரவிந்தர், அன்னையை நோக்கி, மனதுள்ளேயே நெகிழ்ந்து, வணங்கி, நன்றி கூறினார்கள்.

அப்போதுதான் தியான மையத்தில் ஒருவர் பேசியது குறித்து இப்போது ஞாபகம் வந்தது பாகீரதிக்கு.

அன்னை, ஸ்ரீ அரவிந்தரை வணங்கியது மட்டுமல்லாமல், தன்னை அறியாமலேயே Life Divine புத்தகத்தை அவன் சரீரத்தில் வைத்தது எத்தனை நல்லதாயிற்றுஎன உணர்ந்தாள்.

காரணம் அன்பர் பேசிய பேச்சுக்கள்தாம். அதுவும் உண்மையில் நடந்தது அது.....

வீட்டில் அமர்ந்திருந்த அன்பர், புயலடிக்கும்போது, வெளியே தம் பார்வையைச் சாதாரணமாகச் செலுத்த, அதிர்ந்துபோனார். ஒரு பெரிய மரம் சாய ஆரம்பித்தபோது, 'தன் வீட்டின் மேல் விழும் நிலையில் இருக்கிறதே' எனத் தோன்றியதும், சட்டென்று Life Divine புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார், பக்தி உணர்வோடு. என்னே அதிசயம்! ஆமாம், அதிசயம்தான் நடந்தது; ஆனால் உண்மை, சத்தியத்தோடு நடந்தது. சாய்ந்த மரம் அப்படியே... ஆமாம், உண்மையேதான், அப்படியே நின்று, ஸ்திரமாக, ஆடாமல் நின்றே விட்டது. வீடும் தப்பியது. அன்பரின் கண்களில் அடக்க முடியாத உணர்வுக் குவியல்களால் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது. மனம் விம்மி, விம்மித் தணிந்தது. Life Divine புத்தகத்தைத் தம் கண்களில் ஒற்றிக்கொண்டார், நன்றியோடு.

Life Divine என்ற புத்தகம், புத்தகம் மட்டுமன்று; உயிரும், உணர்வும் உள்ள, நம்மை இடர்கள் வரும்போது காப்பாற்றும் **பாதுகாப்புக் கவசம்**; சத்தியத்திற்கும், பக்திக்கும் கட்டுப்பட்டது.

நம் வீட்டில் உடல் நலம் சரியில்லாதவர்களிருப்பின், அந்தப் புத்தகத்தை அவர் மீது படும்படி வைத்தோ, அல்லது படித்தோ, பக்தியுடன் பிரார்த்தித்தால் உடல் நலம் நிச்சயமாகச் சீராகும். இது உண்மையாக நடக்கும்.

புத்தகங்களைச் சாதாரணமாகப் படிக்கிறோம். அவைகள் மனதில் பதிகிறதா, இல்லையாஎன்பது பற்றிய அக்கறையோ, எண்ணமோ இல்லாமல், புத்தகத்திலிருக்கும் வாசகங்கள், வாக்கியங்களில் நம் கண்கள் மட்டுமே ஓடிக்கொண்டிருக்கும். மனது? நிச்சயமாக அதில் பதிந்திருக்காது. கண்களின் ஓட்டத்தோடு ஒட்டாமல், தன்பாட்டுக்குத் தன் ஓட்டத்தை வேறு பாதையில் தொடரும். இரண்டுக்கும் சம்பந்தமே



இல்லாமல், அதனதன் பாதையில், தனித்தனியாகப் பயணித்து ஓட்டத்தைத் தொடரும்போது, எந்த ஓட்டம் ஜெயிக்கும்? ம்... ஹூம்... அது நமக்கே தெரியாதே. தெரியவும் தெரியாது, புரியவும் புரியாது. காரணம்? அப்போதிருக்கும் நம் மனநிலையைப் பொருத்தே ஓட்டத்தின் ஜெயிப்புமிருக்கும். நாமும் அதை ஏற்றுக்கொள்வோம், நம்மை அறியாமலேயே. இது, பொதுவாக எல்லாருக்கும் நடக்கக்கூடிய சாத்தியக்கூறுகளில் ஒன்றுதான். இதில் சந்தேகமேயில்லை. இதை எப்படி எதிர்கொள்வது? என்ன வழி?

இருக்கிறதே.... வழியிருக்கிறதே..... அதுவும் நம்மிடமே புதைந்து கிடக்கிறதே. அதை நாம் உணர்ந்து, அதை உயிர்ப்பித்து, நம்முடைய மனக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால்... ம்... ஹூம்... இந்த சந்தேகமே நமக்குக் கூடாது. நம்முடைய மனக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமென்ற உறுதி நம்மிடம் வேண்டும். அப்போது பாருங்கள், எல்லாமே..... வெகு நன்றாய் சரியான வழியில் பீடுநடை போடும். இதுதான் உண்மையான ஜெயிப்பு.

''முடியுமா?''

இந்தக் கேள்வியே தவறு. இந்த நான்கெழுத்துக்களில் உள்ள கேள்விக்குறியாகிய நெடில் எழுத்தை அகற்றி, மெய்யெழுத்தாக்குங்கள். இப்போது நம் மனம் எப்படி சந்தோஷிக்கிறது! ஆனந்தப்படுகிறது! துள்ளிக் குதிக்கிறது! நாமே எப்படிப் புதிய பிறவி எடுத்ததுபோல் மெய்சிலிர்த்துப்போகிறோம்என்பது கண்கூடாகத் தெரியும்.

அதுவும், அன்னை, ஸ்ரீ அரவிந்தரை ஏற்றுக்கொண்ட, அதுவும் மனமார, உளமார, மெய்சோர ஏற்றுக்கொண்டவர்களுக்கு உணர்ந்து, உய்விக்க முடியும் என்பதில் ஐயமேயில்லை.

அதேதான் நடந்தது கௌதமின் வாழ்க்கையில். தவறு செய்யாத மனிதர்களேயில்லை. மனிதர்கள்தாம் தவறு செய்பவர்கள். அதிலும் தவறு இல்லை. காரணம், ஒரு முறை தவற்றைச் செய்து உணர்ந்தால் தான், அதன் வீர்யம் நமக்குத் தெரியும்; புரியும்.

சூடு பட்டுக்கொண்டால்தானே, சூட்டைப் பற்றி அறிய முடிகிறது? பிறகு எத்தனை ஜாக்கிரதை உணர்வோடு செயல்படுகிறோம்.

அதேதான் நம் வாழ்க்கையிலும் நடக்கும் சம்பவங்கள். பல சம்பவங்களில், சில நம் இதயத்தைப் பிழிந்து, கசக்கி, நம்மை மூர்ச்சையடையக்கூடியதாய், வேகமாய், அதிரடியாய் தாக்குவதுதான் நிஜம். ஆனாலும் விடுபட்டு வருகிறோம். அந்த 'விடுபட்டு' என்பது நடக்கத்தான் எத்தனை? இதயத்தினுள் ஆழத்தில் அழுத்தி, அழுத்தி, அதன் வாயை மூடச் செய்வதா? இல்லை, அதனுடைய ஆர்ப்பாட்டத்திற்கும், கூச்சலுக்கும், அழுகைக்கும் கட்டுப்பட்டு, அதன் காலடியில் வீழ்வதா? என்கிற இந்தப் போராட்டத்தை அனுபவிக்காதவர்களே இல்லை என்பதுதான் நிஜம். ஆமாம்.... இதுதான் சாதாரண மனிதர்களாகிய நம்முடைய வாழ்க்கையின் நடைமுறையில் நடக்கிறது. இதை நம்மைவிட்டு ஒதுக்கும் வழியை நாம் அறியாததால் ஏற்படும் விளைவு நம்மை நாமே கசக்கிப் பிழிந்துகொண்டு, நொந்துநூல் ஆகிறோம். ஏனெனில், நம்மிடமிருந்து எவையெல்லாம் விடுபடுகின்றனவோ, அவையெல்லாம் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டு, விடுபட்டதை இழுத்து, இழுத்து, நம்மை விட்டு விலகாமல், நம்மிடமே வைத்துக் கொண்டு, துயரப்பட்டு, துவண்டுபோய், நம்மை மட்டுமல்ல, நம்மோடு இருக்கும் உற்றவர்களையும் துவண்டுபோகச் செய்கிறோம். இது தேவை அற்றது. ஆனால், அது தேவையற்றதுஎன நாம் நினைக்க வேண்டி, நம்மை நாமே தேற்றிக்கொள்ள படாதபாடு படவேண்டி இருக்கிறது. அந்தப் படாதபாடு படவேண்டியதிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள "ஒரே வழி" இருக்கிறது. அந்த வழிதான் "அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் வழிபாட்டை நாம் மனமார ஏற்றுக்கொள்வது".

அது மட்டுமன்று, அன்னை, ஸ்ரீ அரவிந்தரைப் பற்றிய புத்தகங்களைப் படித்துத் தெளிவு பெறுவது. சில, நமக்குப் புரியாமல் இருக்கலாம். அதைப் பற்றிய கவலை நமக்கு வேண்டவே வேண்டாம். நாம் படிக்கப் படிக்க, நம் மனம், நம்மிடமுள்ள கசடுகளை அகற்றி, நம்மைத் தெளிவுக்குக் கொண்டுவரும் என்பதுமட்டும் சர்வ நிச்சயம்.

மூடனான காளிதாசன் எப்படி கவிஞன் ஆனான்? அவனுடைய மூடத்தனத்தை 'காளி' பார்க்கவில்லை. அவனுடைய உண்மையான



பக்தியைத்தான் பார்த்தாள் 'காளி'. அதன் விளைவு 'கவி காளிதாசன்' ஆனான்.

அதேபோல்தான் கண்ணப்ப நாயனார், சிவலிங்கத்தின் கண்களில் இருந்து வழியும் ரத்தத்தைக் கண்டு, பதற்றப்பட்டு, மெய் சோர, என்ன செய்வதென அறியாது, பின் தன் ஒரு கண்ணையே பெயர்த்து, சிவலிங்கத்தின் கண்களில் வைத்தவுடன், ரத்தம் வருவது நின்றது. இன்னொரு கண்ணிற்குத் தன் கண்ணை வைக்க, அவன் தன் காலை, லிங்கத்தின் கண்களில் வைக்க, அடையாளத்திற்கு வைத்ததை சிவனும் ஏற்றுக்கொண்டார்; காரணம் பக்தி.

பக்தி என்பது பல வழிகளில், பலநிலைகளில் காணப்படுகிறது. ஆனால், நம் அன்னை, ஸ்ரீ அரவிந்தரிடம் நாம் காண்பதோ ஒரே விதத்தில்தான். வர்க்க பேதமேயில்லை. ஒரே ஒரு கட்டுப்பாடு, நம்மிடமுள்ள கெட்டவைகளை அகற்ற வேண்டும். தூய மனதோடு இருக்க வேண்டும். நம் மனதில் தெளிவை ஊட்டும், அன்னை ஸ்ரீ அரவிந்தரின் புத்தகங்களைப் படிக்க வேண்டும். படிக்கப் படிக்க நம் மனம் நிச்சயமாய்த் தெளிவுறும்என்பதில் சந்தேகமேயில்லை.

கௌதமும் அதே போல்தான் தெளிவுற்றான். அது மட்டுமா? அவனால் காயப்பட்டு, அவனுடனேயே வந்தவர்களையும், தன் பெற்றோரைப் போல மதித்து, தன் பெற்றோர்களுக்கிழைத்த கொடுமைகளுக்கு வருந்தியவன், அதை இந்த முதியவர்களுக்குத் தான் செய்யும் கடமைகளாக எண்ணி, அன்பையும், பாசத்தையும் வஞ்சனையின்றி வாரி வழங்கினான்.

பாகீரதியும், நாகராஜனும், கௌதமையும், அவனின் அன்பு, பாசத்தையும் மனதார ஏற்றுக்கொண்டார்கள்.

காரணம், அவர்களின் அடிபட்ட மனதின் காயத்துக்கு கௌதம் மருந்தாகயிருந்ததுதான். அது மட்டுமன்று, அன்னை, ஸ்ரீ அரவிந்தரை அறிந்ததில் அவர்களின் மனக்குமுறல் வெகுவாக அடங்கியிருந்தது. கௌதமின் வீட்டிலிருந்த அந்தப் புத்தகங்களை, தினத்திற்கும் சில பக்கங்களைப் படிப்பதையும் வழக்கமாகக் கொண்டார்கள்.

சில நாட்கள் பாகீரதியும், சில பொழுதுகள் நாகராஜனும் படிப்பதை, எந்தக் காரணம் கொண்டும் நிறுத்தாமல் தொடர்ந்தார்கள். புரிகிறது, இல்லைஎன்பது பற்றி யோசிக்கவேயில்லை. அந்தப் புத்தகங்களைக் கையில் ஏந்தும்போதே பக்தியோடு, பரவசத்தோடு படித்தார்கள் மாறி, மாறி.

'நிம்மதி' என்பது அவர்களிடம் இப்போதுதான் அண்டிவந்தது. அதைப் பூரணமாக அனுபவித்தபடி, வேண்டாததை மனதிலிருந்து 'களை' எடுத்து, அன்னை, ஸ்ரீ அரவிந்தரை மனமார வேண்டியபடியும், கௌதமிற்கு இசைவாக நடந்தபடியுமாக, சீராக, அமைதியான நதியில் போகும் ஓடத்தைப்போல், எந்தவிதமான தள்ளாட்டமுமின்றி இருந்தார்கள்.

*****

காய்கறிகள் வாங்கியபடி, பாகீரதி கடைசியாக, கொத்துமல்லி, கருவேப்பிலை, இஞ்சி வாங்க அந்தக் கடையை நோக்கி நடந்தாள். அப்போதுதான் அது நடந்தது.

அந்தக் கடைக்காரனுடன் பெருத்த குரலில் சண்டைப் போட்டுக் கொண்டிருந்தாள் ஒருத்தி. கடைக்காரனும் அதற்குமேல் கன்னா பின்னாவெனக் கூச்சல் போட்டுக் கேவலமாய் பேசிக்கொண்டு இருந்தான்.

குரலைக் கேட்டு அதிர்ந்துபோன பாகீரதி, 'வேறு எந்த வம்பும் வேண்டாம், கருவேப்பிலை, கொத்துமல்லியும் வேண்டாம்' என்று மளமளவெனத் திரும்பி நடக்க ஆரம்பித்தாள். இதயத்துள் பல விதமான எண்ணங்கள் முட்டி மோதின. அவ்வளவே, அத்தனையும் வெளியே தள்ளி, ''ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம:'' என்னும் மந்திரத்தையே விடாமல் ஜபித்தபடியே நடையை வேகமாக்கினாள்.

திடீரென அவள் தோல் மேல் ஒரு கை படர்ந்தது. அது மட்டும் அன்று, அவளை பலவந்தமாகத் திருப்பியது.

திரும்பினாள் பாகீரதி. அதிர்ந்தேபோனாள் மீண்டும். எதைத் தவிர்க்க வேண்டுமென நினைத்தாளோ, அதுவே அவள் முன்னால் வந்து நின்றது.



''என்ன, வீட்டை விட்டு ஓடிப்போனா கண்டுபிடிக்க முடியாதா? ஏன், பிள்ளைக்கும், மருமகளுக்கும் கெட்ட பெயர் வாங்கித் தரணும்னு ஏதாவது வேண்டுதலா? இதோ, கறிகாயோட நிக்கிறீங்களே.... எந்த வீட்டுல சமையல்காரியாவும், உங்க வீட்டுக்காரர் வேலைக்காரராவும் இருக்கீங்க?.... நல்ல சம்பளமா?.... நல்ல சாப்பாடா?.... ஒடம்பு ஊதி, உப்பியிருக்கே.... சே... இப்படியும் பொழைக்கிற பொழைப்பு ஒரு பொழைப்பா?..... கேவலமாயில்லே..... வெக்கமாயில்லே....''

பேச்சுக்களையெல்லாம் விழுங்கினாள். அதை அப்படியே அன்னையிடம் சமர்ப்பித்தாள். ''அன்னையே சரணம்'' என மனம் ஜபிக்க, ''அன்னையே இப்போது நான் எது பேசினாலும், அவைகள் நீங்கள் பேசியவைகளாகத்தான் இருக்க வேண்டும். எதுவுமே என் இச்சைக்கு வார்த்தைகள் வெளிவரக் கூடாது. அருள்வாய் அம்மா....''.

''என்ன, பேச்சு வரலையா? இல்லே பேசவே முடியாம வாய் அடைச்சே போச்சா?'' ஆங்காரத்துடன் வந்த வார்த்தைகள் கொடூரமாக வந்தன.

திரும்பி நின்றாள் தைர்யமாக பாகீரதி. எதிரிலிருப்பவளைப் பார்த்து சிரித்தாள் மென்மையாக.

''நீ யாரும்மா? எனக்குத் தெரியலையே...? நான், என் பிள்ளையோட இருக்கேன். நான், எங்கேயும் வேலை செய்யலையே.... யாரையோ நினைச்சுண்டு, என்னோட பேசறே போலிருக்கு. நீ நினைக்குற ஆள், நானில்லேம்மா.... வரேன்....''.

சொல்லிய பாகீரதி, திரும்பிப் பாராமல் தன் நடையைத் தொடர்ந்தாள், மனதில் எந்த சலனமுமில்லாமல். விடாமல் அன்னையைப் பற்றிமட்டுமே அவள் மனம் நினைத்தது, ஜபித்தது. கால்கள் தன்னாலேயே வீட்டை நோக்கிச் சென்றது.

பின்னாலேயே ஓடி வந்த பெண்ணை, அங்கிருந்தவர்கள் மடக்கினார்கள்.

''என்ன பொண்ணும்மா நீ? அவங்களுக்குத்தான் உன்னைத் தெரியவேயில்லையே.... நீ ஏன் அவங்க பின்னால ஓடறே. அவங்க

எப்போதும் இந்த மார்க்கெட்டுல வந்து வாங்கறவங்கம்மா. ரொம்ப நல்ல மாதிரி. இன்னிக்கு நீ புதுசா வந்துட்டு, அந்த வயசான அம்மாவை, இப்டி கேவலமா பேசறதை நாங்கல்லாம் பார்த்துகிட்டு சும்மாயிருக்கமாட்டோம். போம்மா சர்தான். நீ, இனிமே இந்த பக்கமே வரவேணாம். நாங்க யாரும் கறிகாய் உனக்கு விக்கவும்மாட்டோம். போம்மா... போ.... போ....''.

கொஞ்சம் பயந்துதான்போனாள் அந்தப் பெண். இத்தனை பேர் தன் மாமியாருக்குப் பரிந்து, பாதுகாப்பாய் இருப்பார்களென அவள் எள்ளளவும் நினைக்கவில்லை. ஆனால், நல்ல இடத்தில்தான் இருக்கிறார்கள் போலிருக்கிறதே.... என மனம் ஒருவிதப் பொறாமையில் படபடத்தது.

இந்த மாமியார் கிழவிக்கு வந்த வாழ்வைப் பாரேன். வீட்டை விட்டு துரத்தியும், நல்லா குண்டுகணக்காயிருக்காளே..... ஹூம்... நாம துரத்தினாலும் நல்லஇடம் கிடைச்சுடுத்து இந்தக் கிழங்களுக்கு....

வீட்டின் முன் வந்து நிற்கும்வரை, பாகீரதியின் அதரம் ''அன்னையே சரண''த்தைத்தான் சொல்லிக்கொண்டிருந்தது. வீட்டினுள்ளே சென்று, நேராக நின்றது அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் எதிரில்தான். கறிகாய் கூடையை கீழே வைத்துவிட்டு, அப்படியே சரிந்தவளின் கண்களிலிருந்து சரசரவெனக் கொட்டியது கண்ணீர். விம்மி விம்மி வெடித்து வந்தது அழுகை.

தோளில் இதமாக ஒரு கை படியவும், சட்டெனத் திரும்பினாள். ''பாகீ.... பாகீ.... ஏன் அழறே.... என்னாச்சு? ஏதாச்சும் அடிபட்டுதா? சொல்லு.... சொல்லேன்....'' நாகராஜன் பதைபதைத்துப்போனார்.

''இல்லே.... மார்க்கெட்டுல... அவ... அவ... வந்து என்னோட சண்டை போட்டா.... ஆனா.... அன்னைதான் என்னைக் காப்பாத்தினது''.

''என்னம்மா... என்ன சொல்றே.... யாரு? அவன்னா.... யாரு? சீனு பொண்டாட்டியா.....ம்.... சொல்லு.....''.

''ஆமாம்..... அவளேதான். மார்க்கெட்டுல வந்து என்னென்னமோ பேசிட்டாங்க. வெலவெலத்துப்போயிட்டேன். ஆனா, மனசுல சட்டுனு



அன்னையையே நினைச்சுண்டேன். சரணம் சொல்ல ஆரம்பிச்சேன். என் திகிலெல்லாம் போயே போச்சு. அவளை யாருன்னு தெரியா-துன்னு சொன்னேன். ஆனா, அது பொய்யின்னு எனக்குத் தெரியும். அன்னைகிட்டே அதுக்குத்தான் இப்ப மன்னிப்புக் கேக்கறேங்க. நான் இப்டி பொய் சொல்லிட்டேனே.... எவ்வளவு பெரிய தப்பு செஞ்சுட்டேன். தாங்கலே..... தாங்கலே....'' அழுதாள் கேவியபடி.

''வேண்டாம் பாகீ, அழாதே. 'பொய்மையும் வாய்மையிடத்த'ன்னு சொல்லியிருக்காங்கயில்லையா. நீ அனாவசியமாவோ, வேணும்-னேவோ எந்தப் பொய்யையும் சொல்லலே. ஒருத்தரைக் கெடுக்கணும்-கற கெட்ட எண்ணத்தோட பொய் சொல்லலே. அன்னைதான் உன்னை அப்டி சொல்ல வச்சிருக்கார். காரணம் உன்னை, அவகிட்ட இருந்து காப்பாத்த. உன் மனசுலயிருக்கிறதையெல்லாம் அன்னைகிட்ட சொல்லிட்டேதானே. அதுக்கப்புறம் ஏன் மறுபடி அதையே நினைச்சு அழறே. அன்னைகிட்ட சொன்னதுமே நீ தெளிவாகணும் பாகீ. அதுதான் அன்னைக்குப் பிடிக்கும். புரிஞ்சுண்டியா?''

ஆச்சரியத்தில் வாய் மூடவே மறந்தாள். தன் கணவரா இப்படி பேசுவது? யார், எது சொன்னாலும், அதற்கு 'சரி' என்பது தவிர வேறெதுவும் சொல்லத் தெரியாத, அதிகம் பேசவே செய்யாதவரா இப்படிப் பேசுகிறார்.

சந்தோஷத்தில் அன்னை, ஸ்ரீ அரவிந்தரையே மெய்சோர, கரம் குவித்துப் பார்த்தாள்.

கணவரின் கரங்களை அன்புடன் பற்றினாள். கண்களில் ஒற்றிக் கொண்டவளின் இதயம் விம்மித் தணிந்தது.

''எனக்கு அன்னைகிட்டே பக்தியிருக்கு, பரவசமிருக்கு. ஆனா, நான் தியானம் செய்வது, வேண்டுவது, எல்லாமே எனக்காகத்தான். ஆனா..... ஆனா..... நீங்க.... நிஜம்மா சொல்றேன்.... ரெண்டு பேருமே தான் புத்தகங்களைப் படிச்சோம்.... மாறி, மாறி படிச்சோம்.... உங்களவுக்கு நான் தெளிவாகலேன்னு நல்லாவே புரியறது. நீங்க மௌனமாயிருக்கிறதாலேயே ஒண்ணும் தெரியாதவர், பரமசாதுன்னு நினைச்சுண்டிருந்தேனே.... எத்தனை அல்பமான புத்தி எனக்கு?

படிச்சதையெல்லாம் உங்க மனசு, அத்தனையையும் உள்வாங்கி இருக்கு. ஆனா, என் மனசு..... மேலோட்டமாத்தான் எடுத்துண்டு இருக்கு. எத்தனை அழகா, என்னமா எனக்குப் புரிய வச்சுட்டீங்க.... அன்னை உங்களை எத்தனை அழகா சொல்ல வச்சுட்டார்.... என்னால, நிஜமாவே சந்தோஷத்தைத் தாங்கமுடியலேங்க. வாங்க, ரெண்டு பேருமே சேர்ந்தாப்பல அன்னை, ஸ்ரீ அரவிந்தரை நமஸ்காரம் பண்ணி வேண்டிப்போம், வாங்க''.

மகிழ்ச்சி சரீரம் பூராவும் பரவியிருக்க, கணவரின் கரங்களைப் பிடித்துக்கொண்டு, அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் வணங்கி- னாள் பாகீரதி. மனதும் தெளிவானது; பயமும் விலகியது. அவரையே பார்த்தாள்.

''பாகீ, அன்னையை நம்பிய பிற்பாடு, ஏன் உனக்கு இப்படி ஒரு எண்ணம்? வேண்டாம் பாகீ. உன்னை எந்த வழிக்கும் கட்டுப்பட முடியாதபடி செய்யும் சந்தேகப்பிராணியைக் கூடவே அடிமடியில் கட்டி வச்சுண்டு, அரைகுறை உணர்வோட நாம் செய்யும் எந்த வேலைகளோ, காரியங்களோ, பிரார்த்தனைகளோ, செயல்பாடுகளோ, எதுவுமே நிறைவாக இருக்க முடியாது, பாகீ..... நிறைவான பலனையும் அடைய முடியுமா, சொல்லு? ஆனா, நம்ம மனுஷ மனம் ஒத்துக் கொள்ளவே செய்யாதும்மா. எவ்வளவு பிரார்த்தனை செய்தேன்? எத்தனை மலர்களை அடுக்கினேன்? என வாதம் செய்யும்; அலுத்துக் கொள்ளும்; குறை கூறும்; தவற்றை உணராது, பாகீ....

எதையுமே நாம, 'இது நியாயமா? சரியா?ன்னு யோசிக்கனும். ஆனா, நம்மகிட்டவிருக்கும் குறையே.... யோசிக்கிற திறனிலிருக்கும் குறைதான், முக்கியமான குறையே..... புரியறதா பாகீ.....''.

முகவாயில் கையை வைத்து, வியந்தேபோனாள் பாகீரதி. எதுவுமே தெரியாதவர், பேச்சைக்கூட அளந்து பேசுபவர், அப்பிராணிஎன நினைத்த, தன் கணவருக்குள் எத்தனை தீர்க்கமான யோசிப்புகள்.

''நிஜம்மா சொல்றேன். உங்களுக்குள்ள 'அன்னை' நன்னா பூந்துண்டிருக்கார். ஏன் தெரியுமா? உங்க மனசுல துளிக்கூட கல்மிஷம் இல்லை; எதிர்பார்ப்பு இல்லே. எழுதாத பேப்பர் போல, சுத்தமா,



வெள்ளையா, தூய்மையாயிருக்கு உங்க மனசு. அதனாலதான், உங்க பரிசுத்தத்தை ஏத்துண்டு, அன்னை உங்ககிட்டேயிருக்கார். எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு. நிஜம்மா.... இன்னிக்கு நீங்க பேசினாப்பல, கல்யாணமாகி இத்தனை நாளுகல்ல ஒரு நாள்கூடப் பேசினதுல. அதுவும், சீனுவும், அவன் பொண்டாட்டி லதாவுமா படுத்தின பாட்டுக்குக்கூட, ஒரு கடுஞ்சொல் சொன்னதில்லே. அன்னையைப் பத்தித் தெரியாமலேயே, நீங்க அவங்களோட வழிகள்ல நடந்து வந்துருக்கீங்க. இப்ப, இந்தப் புத்தகங்களைப் படிச்சுப் படிச்சு, இன்னும் தெளிவாயிட்டீங்க. ரொம்ப சந்தோஷமாயிருக்கு. இனிமே எதுக்குமே மனசு கலங்கப்போறதில்லே. இத நிச்சயமா சொல்றேன், சரிதானே''.

''ரொம்ப சரி பாகீ. ஆனா, அதை எங்கிட்டே ஏன் சொல்றே? அவசியமேயில்லையே.... அதோ.... அவங்க ரெண்டு பேருமா, பெரியவங்களா, நம்மளையே பார்த்துண்டு உக்காந்திருக்கா பாரு, அவாகிட்ட சொல்லு. அவாள நமஸ்காரம் பண்ணி, அவாளோட ஆசீர்வாதத்தை வாங்கிக்கோ பாகீ. அதுதான் சரிம்மா. இனிமே உனக்கும் மனசுல எந்த விதமான பயமோ, சஞ்சலமோ ஏற்படவே செய்யாது, புரிஞ்சுதா?''

'சரி' என்பது போல தலையாட்டிய பாகீரதியின் மனதும் இப்போது நிம்மதியாகயிருந்தது. கணவரின் அனுசரணையான பேச்சு அவளுக்கு மயிலிறகானது. அதிலுள்ள தத்துவார்த்தமான பேச்சுகள், மனதை ஊடுருவிச் சென்றது. தெளிந்தாள் பாகீரதி.

*****

நாட்கள் கடந்தன. பாகீரதி, கௌதமுக்கும், நாகராஜனுக்கும் டைனிங் டேபிளில் பரிமாறிக்கொண்டிருந்தாள்.

''அம்மா, நீங்களும் உக்காருங்கம்மா. சேர்ந்தே சாப்பிடலாம்மா. அப்புறமா, தனியா உக்காந்துண்டு, கொஞ்சமா கொறிச்சுட்டு எழுந்துடுவேள். உக்காருங்கம்மா....''

கௌதம், பாகீரதியைப் பிடித்து இழுத்து உட்காரவைத்தான்.

படபடவென்று கை தட்டும் சத்தம்.

''பேஷ்.... பலே பேஷ்..... யாரோ ஒரு மூணாவது மனுஷன் வீட்டுல உக்காந்துண்டு, வெக்கமில்லாம, அவன் இழுக்கிற இழுப்புக்கு, இழுபட்டுண்டு, நன்னா சப்புகொட்டிண்டு சாப்பிடறதுக்கு வெக்கமா இல்லே. எப்டி துளிர்த்துப்போயிருக்கு பாரு சரீரம். சே.... எனக்குன்னா அவமானமாயிருக்கு.... இப்டி பார்க்க.... அசிங்கமா.....''

கௌதமன் சட்டென எழுந்தான்.

''யாரு? யாரு நீங்க? எப்டி இந்த வீட்டுக்குள்ளே வந்தேள்? தெரியலே? யாரைப் பார்த்து இத்தனை கேவலமா பேசறேள்? புரியலே.... வந்தவர் வாயிலேருந்து வந்த வார்த்தைகள்.... ம்....ஹூம்..... சொல்லவோ, கேட்கவோ முடியாதபடி.... எங்களுக்கு யாரும் இப்படிப்பட்ட சொந்தக்காரரளோ, ஃப்ரெண்ட்ஸோயில்லையே.... யாரு நீங்க? என்ன வேணும் உங்களுக்கு? எதுவானாலும் இங்கே அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் இருக்கிற இடம், இங்கே உரக்கவும் பேசக்கூடாது, கத்தவும் கூடாது. அனாவசியமான பேச்சே கூடாது. வாங்க, வெளியில போய் பேசலாம். அப்பா, நீங்களும் அம்மாவும் இங்கேயே இருங்க. நான், இவரோட பேசிட்டு வரேன். வாங்க சார், வாங்க''.

''உன்னோட எனக்கென்னப்பா பேச்சு? உள்ளேருந்து அவாள அனுப்பு. அவாளோடத்தான் பேசணும்.... போ.... போ....''

''சார், நீங்க யாருன்னே தெரியாது. உள்ளே தடதடன்னு வந்தீங்க, கன்னாபின்னான்னு பேசறீங்க. எங்களுக்கு இது பழக்கமேயில்லே. நீங்க யாரு? எதுக்கு வந்தீங்க? சொல்லுங்க. ஆனா, கத்தக்கூடாது. இந்த வீட்டுல சத்தமே கூடாது. புரிஞ்சுதா.... ம்.... இப்ப சொல்லுங்க, நீங்க யாரு?''

''ம்..... நாங்க யாருன்னு அவங்களையே கேளுங்க....''.

''ஏன்? நீங்களே சொல்லலாமே. ஏன் சொல்ல முடியலையா? இல்லே.... உங்களுக்கு அவா யாருன்னு தெரியலையா? ஆனா, எனக்கு நன்னா தெரியும். ஏன்னா, அவங்க என்னோட அப்பா, அம்மா. என்னைப் பெறாத அப்பாவும், அம்மாவும். அவங்களை நான் தெய்வத்துக்குச் சமமா வெச்சு வணங்கறவன். அவங்களை ஒரு



குறை சொன்னாகூட தாங்கமாட்டேன். சரி, அதெல்லாம் உங்களுக்கு எதுக்கு? இப்ப சொல்லுங்க, அவங்க ஏதாவது உங்களுக்குப் பணம் தரணுமா? சொல்லுங்க, நான் தரேன். ஆனா, அவங்களை எந்த தொந்தரவும் செய்ய விடமாட்டேன். அது மட்டும் நிச்சயம். சொல்லுங்க... இப்ப, எதுக்காக அவங்களைத் தேடி வந்தீங்க... ம்.... சொல்லுங்க.... சொல்லுங்க சார்....''.

விக்கித்து, விதிர்த்து, வியர்த்தேபோனான் வந்தவன். 'இதேதுடி வம்பு? நாம பிரச்சனை பண்ணி, 'வந்ததை வரப்படுத்திக்கோ வல்லக் காட்டு ராமான்னு' ஏதாவது பிடுங்கிண்டு போகலாம்னு பார்த்தா, பெரிய வம்பாயிடும் போலிருக்கே..... என்ன செய்யலாம்? ம்... இவனோட அப்பா, அம்மாங்கறானே..... புரியலையே....' மறுகணமே விரைப்பானான்.

''ஆமா, அவா எனக்குத் தர வேண்டியது நிறையயிருக்கு. அதை வாங்கிண்டு போகத்தான் வந்தேன். இப்ப, மொதல் தவணையா.... எனக்கு இருபத்தஞ்சாயிரம் தரணும். அதைத் தந்துட்டா நான் போறேன். தேவையானா மறுபடி வருவேன், கேப்பேன், வாங்கிண்டு தான் போவேன்''.

திண்ணக்கமாய், திமிருடன் பேசும் அவனைப் பார்த்த கௌதமுக்கு, ஏனோ மனதில் ஒரு குறுகுறுப்பு. அங்கிருந்தே... அன்னை, ஸ்ரீ அரவிந்தரை மனதார வேண்டிப் பார்த்தான். ஐந்து வினாடிகளுக்கு இமைகளை மூடி, அன்னை, ஸ்ரீ அரவிந்தரின் பாதங்களை 'சரணம்' சொல்லி பிரார்த்தித்தான், முழுமையான பக்தியோடு. மின்னலெனத் தோன்றியது அன்னையின் கோட்பாடு-களில் ஒன்று:

''DISCRIMINATION'' (வேறுபாட்டை, வேறுபடுத்திக் காட்டு).

புரிந்துபோனது. அன்னைக்கு நன்றி சொன்னான்; தைர்யம் ஆனான்.

''சரி, இருபத்தஞ்சாயிரம் நான் தரேன். இவங்களுக்கு நீங்க கடன் கொடுத்திருந்தா, சும்மா கொடுத்திருக்கமாட்டீங்க. அதுக்கான ரசீதோ, கையெழுத்தோ, புரோநோட்டோ கொண்டு வாங்க. அதைப் பார்த்துட்டு, அவங்க எத்தனை பணம் தரணுமோ, அதை சப்ஜாடா

தந்துடறேன். வட்டி கேட்டாலும் தறேன். அதைக் கொண்டுவந்து இருக்கீங்களா?''

அதிர்ந்து, ஆடியேபோனான் வந்தவன். 'இதென்ன, கிணறு வெட்ட, பூதம் புறப்பட்ட கதையானதே. சரி, இன்னும் கொஞ்சம் பேசிப் பார்க்கலாம்', பயத்தையடக்கியபடி பேசினான்.

''ரொம்ப தெரிஞ்சவர்னு சும்மாதான் கொடுத்தேன். அப்புறமா, தேடினா, தலைமறைவாயிட்டாங்க. என்னமோ நான் செஞ்ச புண்ணியத்துல இவங்க இருக்கிற எடம் தெரிஞ்சுபோச்சு. வந்துட்டேன்....''.

''ரொம்ப நல்லதா போச்சு. யாராயிருந்தாலும் கடனாளியாக இருக்கக்கூடாது. அப்பா, இங்கே வாங்க. இவர், ஒண்ணுமே எழுதி வாங்கிக்காம இருபத்தஞ்சாயிரம் ரூபாய் தந்ததா சொல்றார். அது சத்தியமான நிஜம்னா, நான் கொடுத்திடறேம்பா.....''.

''இல்லே கௌதம், எனக்கு அத்தனை ரூபா கடன் வாங்கற அளவுக்கு எந்த செலவும் இல்லே. எங்க ரெண்டு பேருக்கும் பெரிய வியாதின்னும் ஒண்ணும் வரலே. அதனால, இதுவரை யார்கிட்டயும் ஒத்த ரூபாகூட கடன் வாங்கலேப்பா.... நான்தான் என் பணத்தை இவருக்குக் கொடுத்திருக்கேன். உன் அம்மாவும், ஏழெட்டு சவரன் நகைகளைக் கொடுத்திருக்காப்பா.... மத்தபடி நாங்க யார்கிட்டயும் ஒரு பைசா கடன் படலே. நீ என்ன பதில் சொல்றியோ, சொல்லி அனுப்புப்பா.... எனக்கு 'ப்ரே' பண்ணணும்போலயிருக்குப்பா.... வரேன்...''.

கண்கள் செருக, மயக்கம் வரும் நிலைக்கு ஆளானான் வந்தவன். வாய் பேச முடியாமல், உதடுகள் ஈரப்பசை வற்றி ஒட்டிக்கொண்டன. கண்கள் பரிதாபமான பார்வையைப் பார்த்தது.

மேலும் ஒன்றும் பேசாமல், மௌனமாய் நின்றவனை, கௌதம் வந்திருந்தவனின் தோள் மேல் கையைப் போட்டு வெளியே அழைத்துப் போனான்.

தொடரும்....

❀ ❀ ❀



# முன்னேற்றம் தரக்கூடிய சாதனை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N.** அசோகன்

## ENDURANCE - விடாமுயற்சி:

நாம் ஒரு செயலில் இறங்கிவிட்டோம் என்றால், அது முடியும் வரை, அதில் வெற்றி கிடைக்கும்வரை நிதானம், பொறுமை, விடா முயற்சி அவசியம். சாதாரணமாக மனிதர்கள் ஆரம்பத்தில் துணிச்சலுடனும், தைரியத்துடனும் எந்தத் தடங்கலையும் எதிர்நோக்கி சமாளிக்கும் மனநிலையுடன் காரியத்தை ஆரம்பிக்கின்றார்கள். அதில் பலர் ஆரம்பக் கட்டத்தில் ஏற்படுகின்ற பெருந்தடங்கல், தோல்வியைக் கண்டு பயந்து, முயற்சியைக் கைவிட்டுவிடுகின்றனர். அப்படிப் பட்டவர்களுக்கு நாம் சொல்லக்கூடியது ஒன்றும் இல்லை. முன்னேறக் கூடிய வாய்ப்பையும், சாதனை படைக்கக்கூடிய வாய்ப்பையும் இழக்கின்றனர். நம் நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த பெருந்தலைவர்கள் காந்திஜீ, நேருஜீ, சர்தார் படேல் போன்றவர்கள் தாங்கள் முதல் முறை சிறையில் அடைக்கப்பட்டு, ஆங்கிலேயர்களால் கொடுமைப்படுத்தப்பட்டதைக் கண்டு பயந்து, சுதந்திரப் போராட்டத்தைக் கைவிட்டு இருந்தால், நம் நாடு என்னவாகி இருக்கும்? அவர்கள் இவற்றிற்கெல்லாம் பயப்படாமல் சிறைவாசத்தையும், மிரட்டல்களையும், துன்புறுத்தல்களையும் துணிச்சலாக, நிதானமாக, பொறுமையாக எதிர்கொண்டு, தங்கள் இலக்கிலிருந்து ஒரு சிறிதும் வழுவாமல் விடாமுயற்சியுடன் போராட்டம் நடத்தியது இந்தியாவிற்குச் சுதந்திரத்தை 1947இல் பெற்றுத் தந்தது. அப்படிப்பட்ட பெருந் தலைவர்கள் தங்களுக்கிழைத்த கொடுமையையும், ஹிம்சையையும் சகித்துக்கொண்டதால்தான் இந்தியாவிற்கு அவர்களால் விடுதலை பெற்றுத்தர முடிந்தது.

விடாமுயற்சி என்பது எல்லா நிலைக்கும் அவசியம். தேச

விடுதலைக்கு மட்டும் அல்லாமல் சமூகத்திற்கும், குடும்பத்திற்கும், ஒரு தனி மனிதனுடைய வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமான ஒன்று ஆகும். வாழ்வில் சாதிக்க வேண்டும், முன்னேற வேண்டும் என்பவர்களுடைய பாதை கரடுமுரடாகத்தான் இருக்கும். அவர்கள் பல இடையூறுகளையும், கஷ்டங்களையும் சந்திக்கத்தான் வேண்டி இருக்கும். ஒரு புது முயற்சிஎன்பது மலை ஏறுவது போலாகும். மலை ஏறும்பொழுது நமக்கு எவ்வளவு சக்தி தேவைப்படுகின்றதோ, எவ்வளவு உறுதி தேவைப்படுகின்றதோ, அந்த அளவிற்குச் சாதிக்க விரும்புபவன் தன்னைத் தயார் செய்துகொள்ள வேண்டும். திரு. P.C. Reddy அவர்கள் அப்பல்லோ மருத்துவமனைஎன்ற ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்தபொழுது பலர் கேலியும், கிண்டலும் செய்தனர். நம்முடைய நாட்டிற்கு அந்தக் காலகட்டத்தில் ஒரு Corporate Hospital என்ற ஒரு concept ஒத்து வாராது. அதில் வெற்றி பெற முடியாதுஎன்று பலவிதமான கருத்துகளை வெளியிட்டனர். இதைக் கண்டெல்லாம் திரு. P.C. Reddy அவர்கள் மனம் தளர்ந்துவிடவில்லை. தம் முயற்சியைக் கைவிடவில்லை. தொடர்ந்து தம் விடாமுயற்சியால் அந்த அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் என்ற நிறுவனத்தை உருவாக்கினார். இன்று அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ் ஒரு ஸ்டார் ஹாஸ்பிடலாக ரூ.590 கோடி turn-over உடைய ஒரு சேவை நிறுவனமாகச் செயல்படுகின்றது. அப்பல்லோ ஹாஸ்பிடலில் சிகிச்சை எடுத்துக்கொள்வதுஎன்பது ஒரு prestige and status symbolஆக இன்று இருக்கின்றது. அவருடைய வெற்றியைத் தொடர்ந்து இன்று பல Corporate Hospitals இந்தியா முழுவதும் துவங்கப்பட்டு, உயர் சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல வேண்டிய அவசியமில்லைஎன்று மட்டுமல்லாமல், நம் நாட்டிலுள்ள Speciality Hospitalஐ நாடி வெளிநாட்டவர் வரும் நிலைக்கு உயர்ந்துள்ளன. Indian Express நிறுவனம் emergency நிலவிய காலத்திலும், Bofors ஊழல் விவகாரத்தைப் பற்றித் தங்கள் பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்து, investigate செய்து, விமர்சனம் செய்தபொழுது, அப்பொழுது இருந்த ஆட்சி அவர்களுக்குக் கொடுத்த துன்புறுத்தல்கள் - hostile behaviour of the Government - அவர்களை அந்த investigationஐ கைவிடும்படிச்



செய்ய முடியவில்லை. தொடர்ந்து அவர்கள் தாங்கள் உண்மை என நம்பியதைப் பல கஷ்டங்கள், கெடுபிடிகளுக்கிடையே வெளியிட்டுக் கொண்டுதான் இருந்தார்கள். இன்றும் அங்கே வேலை செய்பவர்களிடம் கேட்டால், “அந்தக் காலகட்டம் (period) எங்களுக்கு ஒரு பொன்னான காலமாகும். எங்களுடைய சகிப்புத்தன்மைக்கும், விடா முயற்சிக்கும், பத்திரிகையின் சுதந்திரத்திற்கும் ஏற்பட்ட ஒரு பெரும் challenge and ultimate success” என்று கூறுவார்கள்.

உலகச் சரித்திரத்தைப் பார்க்கும்பொழுதும், தனி மனிதனுடைய சரித்திரத்தைப் பார்க்கும்பொழுதும், உதாரணமாக காந்திஜீ, நேருஜீ, சர்ச்சில், லெனின் போன்ற தேசியவாதிகளின் வாழ்க்கை வரலாறு ஆகட்டும், அல்லது Edison, Darwin, Galileo போன்ற விஞ்ஞானிகளின் வாழ்க்கை வரலாறாகட்டும், அல்லது Martin Luther, Jesus Christ, Buddha, Shankarar போன்ற great religious figures ஆகட்டும், அவரவர்களுடைய வாழ்க்கையில் பல இடையூறுகளையும், கஷ்டங்களையும் சந்தித்து, சமாளித்து, வெற்றி கொண்டபிறகே, அவர்கள் லட்சியத்தை அவர்களால் எட்ட முடிந்தது. அவ்வாறு அவர்கள் விடாமுயற்சியுடன் செயல்படாமல் இருந்தால், அவர்கள் வெற்றி அடைந்திருப்பார்களாஎன்பது ஒரு கேள்விக்குறிதான்.

அன்னையும், பகவான் ஸ்ரீ அரவிந்தரும் தங்களுடைய ஆன்மீகப் பயணத்திலே, பூரண யோக லட்சியத்தை அடைவதற்காக எடுத்த முயற்சிகளிலே, பல கஷ்டங்களையும், சவாலையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் அவர்கள் எதிர்கொண்டது எல்லாமே physical challenge என்பதைவிட inner challenge and endurance என்று கூறலாம். அன்னை, ‘உடலின் செல்களை திருவுருமாற்றம் செய்யும்பொழுது, அது மிகுந்த வேதனையைக் கொடுத்ததாகவும், ஆனால் பகவான் ஸ்ரீ அரவிந்தர் தம்மிடம் ஒரு வார்த்தை மட்டும் அல்லாமல், உணர்ச்சிகளிலும், முகபாவத்திலும்கூட அதைக் காட்டியதில்லை’ என்று Agendaவில் கூறியிருக்கிறார். பகவான் சூட்சும உலகிற்குச் சென்றபொழுது, தீயசக்திகள் அன்னையிடம், “உங்களால் இனி தனியாக பகவான் விட்டுச் சென்ற பூரண யோகத்தைத் தொடர முடியாது. உங்களுக்கு அதற்குரிய

சக்தியில்லை. நிச்சயமாக உங்களுக்கு வெற்றி கிடைக்காது'' என்று தொடர்ந்து அவரைத் துன்புறுத்தி, அவருடைய இலட்சியத்தைக் கை விட்டுவிடுவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்தன. அன்னை இந்தத் தீயசக்திகளின் தாக்குதலைச் சகித்து, சமாளித்து, வெற்றியும் கண்டார். அதன் பலனாக 1956ஆம் ஆண்டு சத்தியஜீவிய ஒளி முதலாவதாக இப்பூவுலகத்தில் இறங்கியது.

''உலகத்தைத் துன்பத்திலிருந்து விடுவிக்க வந்த அவதாரங்களும் அத்துன்பத்திலிருந்து தப்ப முடியாது'' என்று நாரதர் கூறினாலும், ''தன்னுடைய விதியையும், அதன்மூலம் உலகத்தின் துன்பத்தையும் மாற்றும் சக்தி சாவித்திரிக்கு உண்டு'' என்றும் கூறுகிறார். எமன் சாவித்திரியிடம், ''உலகம் அழியக்கூடியது. அழியாத உன் மனத்தை அழியும் உலகிற்கு அளிக்காதே. பிரம்மத்தின் பெரிய பாதையை மறந்து, அதன் சுதந்திரத்தை இழந்து, உலகின் சிறுமையிலும், சிறு சந்தோஷத்திலும் உன்னை இழக்காதே. பிரபஞ்சம் சிறியது; மாற்றக்கூடியது அன்று'' என்று கூறுகிறான். ஆனால் சாவித்திரி அதை ஏற்காமல், ''உலகை மாற்ற முடியாவிட்டால், சத்தியத்திற்கும், ஞானத்திற்கும் அர்த்தமில்லை'' என்று கூறி, காலனையும் தன் ஒளியால் கரைத்து, வெற்றி பெறுகிறாள். இது, அன்னை பூவுலகில் சத்தியஜீவிய ஒளியைக் கொண்டுவரச் செய்த யோகம். இவற்றையெல்லாம் பார்க்கும்பொழுது விடாமுயற்சி, நிதானம் என்பது சாதனையாளர்களிடம் மிகவும் அவசியமாக இருக்க வேண்டிய ஒரு பண்பாக அமைகிறது.

தொடரும்....

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எந்தக் கட்டுப்பாடும் அதனளவில் நிறைவு பெறாவிட்டால் பலன் தாராது.

***'யோகம்' என்பது உயர்ந்த வாழ்வு. கட்டுப்பாடு அதன் ஆரம்பம்.***





## P.83 The old adamantine vetoes stood no more.

- ✡ **பழம்பெரும் பிடிவாதம் பாதத்தை இழந்தது.**
- ✡ **இயற்கையின் தடைகள் இனமறியாமல் அழிந்தன.**
- ✡ **சுருக்கும் சட்டத்தின் மலைப்பாம்பின் சுருள்கள்.**
- ✡ **இறைவன் விழித்தெழுந்தபின் தடை செய்யவொன்றில்லை.**
- ✡ **தலைவிதியின் ஜாதகம் தகர்த்தெறியப்பட்டது.**
- ✡ **காலன் வேட்டைக்குரிய சிறு பிராணிகள் இங்கில்லை.**
- ✡ **ஆதரவு தேடும் அனாதை ரூபமில்லை.**
- ✡ **இது பிரபஞ்சத்தை விழுங்கும் பிரம்மாண்ட ஜீவன்.**
- ✡ **வெடித்தெழும் உலக இதயத்தின் சம்மட்டி அடிகள்.**
- ✡ **பாதுகாப்பான ஏரிக்கரைகளை வெட்டி விலக்கும் போக்கு.**
- ✡ **பிரபஞ்ச கதியின் பிரம்மாண்டமான போக்கு.**
- ✡ **ஆத்மாவும், பிரபஞ்சமும் அனைத்திலும் சமமான சக்திகள்.**
- ✡ **அளவிலா காலத்தின் எல்லையில்லா ஜீவன்.**
- ✡ **அனந்தன் இயற்கையினுள் எழிலுற நுழைந்தான்.**
- ✡ **அசுர வேகத்தின் அளவிலாப் பாதைக்கு வரையறையற்ற எல்லை.**

- ✡ **திரை விலகியது; கண் திறந்து சிமிட்டிற்று.**
- ✡ **இரகஸ்ய இயற்கை வலுவிழந்து வலிய வந்தது.**
- ✡ **பயங்கரமான, பிரம்மாண்டமான அந்தி இருளில்,**
- ✡ **மலை போன்ற தனிமையின் வலிமையைக் கடந்தது.**

- ✡ அவனுறுதி சுடர்விட்டுப் பதியும்பொழுது அருகிலிருந்தது.
- ✡ இருண்ட அறையில் வினோதமான சூரியன் விளக்காய் அமைந்தது.
- ✡ அவனுடைய புதிரான விடைக்கு அளிக்காத பதிலாக,
- ✡ படமெடுக்கும் சக்திகளின் ஆபத்தான அறிகுறிகள்.
- ✡ அர்த்தமுள்ள அறிவு அதிகாரம் செய்வதை ஏற்றது.
- ✡ காலத்தின் பார்வை கட்டாயப்படுத்துவதை ஏற்றது.
- ✡ சாமர்த்தியத்தின் கணக்கிலடங்காத சதிர்.
- ✡ ஜெயிக்க முடியாத செயல் தவிர்க்க முடியாமல் வருகிறது.
- ✡ பெருவெளியின் பெருவலிமை இரகஸ்யம் பேசுகிறது.
- ✡ நம் சிறு தேவையின் குறுகியப் புலனைக் கடந்தது.
- ✡ குட்டிதேவதையின் சூட்சும உரிமை,
- ✡ வலிமையான அதிகாரத் தோரணையின் அர்த்தமுள்ள அடையாளங்கள்,
- ✡ கணித சக்தியின் யந்திரம்;
- ✡ அற்புதம் செறிந்த ரகங்களின் சக்தி.
- ✡ புவியில் வளரும் வலிமை செயல்பட விழைவது,
- ✡ தன்னையறியும் பிரகிருதியின் விரைவான வேகம்.

❀❀❀

## ஜீவிய மணி

**அனைத்தும் முடிவது அந்தராத்மாவின் குரலில்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

# ஆன்றவிந்தடங்கிய சான்றோர்

Gentleman என்பவன் நியாயமானவன், நாணயஸ்தன், பிறர் மனம் புண்பட நடக்காதவன், சிறியன சிந்தியான். இது ஆங்கிலச் சொல். இதற்குரிய நேரான தமிழ்ச் சொல் இல்லை. சான்றோர் என்பது பெரிய கருத்து. ஆத்ம விளக்கம் பெற்று, அதனால் பதவி வந்து, ஆண்டு, அவிந்து, அடங்கிய சான்றோர் என்பது இலக்கியச் சொல்.

இங்கிலாந்தில் சொத்திற்கு வாரிசு இருந்தால் வாரிசுக்குப் போகும். இல்லாவிட்டால், அதை ஒருவருக்குக் கொடுக்கப் பிரியப்பட்டால் பொதுவாக எவரும் ஏற்கமாட்டார்கள். தகப்பனாரிடமிருந்தும் பிள்ளைகள் அவர்கட்கு உரிமையில்லாத பணத்தை ஏற்கமாட்டார்கள்.

Vanity Fair என்பது உலகப் பிரசித்திப் பெற்ற நாவல். வீண் பெருமையின் சந்தைஎனப் பொருள்படும். அமீலியா என்ற அழகான பெண், உத்தமி. பார்த்தவர் அனைவரும் பிரியப்படுகிறார்கள். அவளுக்கு ஜார்ஜ் மீது பிரியம். ஜார்ஜ் சாதாரண பையன்; நிலையற்றவன்; மனம் சபலமடைந்தவன். அவனை அவன் பெற்றோர் அமீலியாவைத் திருமணம் செய்துகொள்ளச் சொன்னார்கள். அவன் அழகன். சம்மதித்தான். அவன் மனம் சூது, டிரஸ், பணம், பெண்களிலிருந்தது. டாபின் என்பவன் ஜார்ஜ்வுடன் கேப்டனாக இருப்பவன். அவன் உயர்ந்த மனமுடையவன்; உத்தமன்; சில்லரையாக இருக்கமாட்டான்; நாணயமானவன்; gentleman. அமீலியாவைப் பார்த்தவுடன் விரும்புகிறான். அவளுக்கு அது தெரியாது. ஜார்ஜ்க்கு அமீலியாவைத் திருமணம் செய்வது அவசியமில்லை. அந்த நேரம் அமீலியாவின் தகப்பனார் திவாலானார். ஜார்ஜ் அவளை மறுத்துவிட்டான். அவள் அவனை நினைத்து உருகுகிறாள். அவனுடைய பெற்றோர், பணமில்லைஎன்பதால் மனம் மாறி, திருமணத்தை எதிர்க்கின்றார்கள்.

டாபின் பிரியம் உயர்ந்தது; உன்னதமான காதல். அவளை நினைக்காத நேரமில்லை. அவளுக்கு டாபின் தன்னை விரும்புகிறான் எனவும் தெரியாது. திவாலாகி, வீட்டுப் பொருள்கள் ஏலம் போட்டார்கள். அமீலியாவின் பியானோவை டாபின் ஏலத்தில் வாங்குகிறான். ஜார்ஜ் வாங்கியதாகச் சொல்லி அமீலியாவிடம் தருகிறான். அமீலியாவுக்கு ஜார்ஜ் மேலிருந்த அபிப்பிராயம் மேலும் உயர்ந்தது. பெண் ஜார்ஜை விரும்புகிறாள் என அறிந்தபின் டாபின் மனம், ‘அவள் சந்தோஷப்படுவதே முக்கியம்’ எனக் கருதி ஜார்ஜுடன் வாதாடி, அவன் பெற்றோரை எதிர்த்து, தானே முன்வந்து திருமணத்தை நடத்திவைக்கிறான்.

*பின்பக்க அட்டையில் தொடரும்.....*

❀❀❀

*....முன்பக்க அட்டையின் தொடர்ச்சி*

திருமணமான 15 நாள் தம்பதிகள் உடன் உறைகிறார்கள். டாபின், ஜார்ஜ்க்கு பால்ய நண்பன். இருவரும் எப்பொழுதும் ஒன்றாக இருப்பார்கள். போர் மூள்கிறது. இருவரும் போர்க்களம் போகிறார்கள். ஜார்ஜ் இறந்து விடுகிறான். அமீலியா கருவுற்றிருக்கிறாள். அமீலியாவைத் திருமணம் செய்ததால் ஜார்ஜ் தகப்பனார் அவனை உயிலிலிருந்து விலக்கிவிடுகிறார். ஜார்ஜ் இறந்தபின் அமீலியாவிடம் பணமில்லை. டாபின் அவள் மீது உயிரை வைத்திருக்கிறான்; அவளுக்குச் சேவை செய்வதே இலட்சியம்; இரவு-பகலாக டாபினுக்கு அமீலியா நினைவு. நினைவில் நிழலாக அவனுக்கு அவள் அமைகிறாள். அவளுக்குப் பிரசவமாகிறது. போர் முனையிலிருந்து இங்கிலாந்து திரும்ப வேண்டும். வந்த பிறகு வாழ்க்கை நடத்தப் பணமில்லை. டாபின் தன் பணத்தை ஜார்ஜ் பணம்என நடித்து பல வகைகளில் அமீலியா குடும்பத்தை நடத்திவருகிறான். இறந்த கணவனை நினைத்து உருகுகிறாள். திருமணமான 15ஆம் நாள் வேறொருத்தியுடன் ஓடிப்போக ஜார்ஜ் முயன்றது டாபினுக்குத் தெரியும். அவள் மனம் ஜார்ஜில் லயித்திருப்பதைக் கண்டு, டாபின் இந்தியா போய் மேஜராக 12 ஆண்டு வேலை செய்கிறான். மனம் அவளில் மட்டுமிருக்கிறது. அமீலியா மறுமணம் செய்துகொள்ளப்போவதாக தவறான செய்தி கேட்டு அலறிப்புடைத்துக் கொண்டு இங்கிலாந்து வருகிறான். 18 ஆண்டுகளாக அவள் நினைவில் டாபின் தூய்மையாக வாழ்கிறான். அவளைப் பார்த்து, தன் மனத்தை அவளிடம் கூறுகிறான். அவள் இசையவில்லை. அத்துடன் தன் இருப்பிடம் வருகிறான். அமீலியாவின் தோழி அவளை, டாபினை மணக்க வேண்டும்; டாபின் உயர்ந்தவன்; ஜார்ஜ் தன்னுடன் ஓடிப்போக விரும்பி எழுதிய சீட்டைக் காட்டி, அவளைச் சம்மதிக்க வைக்கிறாள். அமீலியா டாபினை மணக்கிறாள்.

“ஜார்ஜ் ஓடிப்போக நினைத்தது எனக்குத் தெரியும். அதை உன்னிடம் கூறி, அதனால் என்னை மணக்கும்படிக் கேட்க என் மனம் இடம் தரவில்லை” என டாபின் அமீலியாவிடம் கூறுகிறான்.

✡ **18 ஆண்டுகளாக ஒருத்தியிடம் மனதை ஒப்படைத்தும், அவள் தகுதியற்ற கணவனை நாடியபொழுது அத்திருமணத்தை முடித்துவைத்ததும், அவனை நினைத்து அவள் உருகும்பொழுது, அவனைப் பற்றி குறைகூறி அதன் பலன்பெற மறுப்பதும் சான்றாண்மை Gentlemanliness எனப்படும். எவ்வளவு பெரிய இலாபம், ஆதாயம் எனக்கு வரும் என்றாலும் அடுத்தவர் மீது குறைகூறி, அதைப்பெற மனம் இசையாதது உத்தம குணம்.**

❀❀❀

April 2008 Jiviyam 13 Malar 12
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடு

கர்மயோகியின்

**எங்கள் குடும்பம்** (பாகம் 2) ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்**

*தமிழாக்கம்:* என். அசோகன் ரூ.100/-

**LECTURES ON SRI AUROBINDO'S THE LIFE DIVINE**

**Garry Jacobs** ரூ.150/-

**SATYA JYOTHI**

**(CONCISE TRUISMS)**

**N.Asokan** ரூ.200/-

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு, புதுச்சேரி
- 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191